PUBLIC LIBRARY JAFFNA

உ

# இந்து சாதனம்

## HINDU ORGAN

சைவ பரிபாலன சபை வெளியீடு
ஆரம்பம் : விரோதி ஸ்ரீ ஆவணி மீ 26 ஆம் உ (1889)

web : www.hinduorgan.com
e-mail : editor@hinduorgan.com

புத்தகம் : 121
இதழ் : 12

விகிர்தி வருடம் ஆவணித் திங்கள் 1ஆம் நாள்
(17.08.2010)

பிரதி விலை
ரூபா. 50.00

## தெல்லிப்பளை - துர்க்கை அம்பாள்

சிவா - சரணன்

"கோயிலில்லா ஊரிற் குடியிருக்க வேண்டாம்" என்ற "உலகநீதி" யைச் சாதாரண மக்களுக்கு விடுக்கப்பட்ட 'பக்திக் கட்டளை' யாகக் கொள்ளலாம். அதே வேளையில் "குடிகள் இல்லாத இடத்தில் நீயே முதலிற் கோயில் கொண்டருள வேண்டும்" என்பது அதன் மறைபொருளாகி எல்லாம் வல்ல இறைவனிடம் செய்யப்படும் பிரார்த்தனையாக இருப்பதாகவும் கொள்ளலாம்.

ஒரு பிரதேசத்தில் மக்கள் முதன் முதலாகக் குடியேறுவதற்கு முன்னரே அங்கே ஒரு கோயிலாவது இருக்க வேண்டும்; அல்லது மக்கள் குடியேற்றம் நிகழும்போதே கோயிலும் உருவாக்கப்பட வேண்டும். இக்காலத்துக் கோயில்கள் பல, ஆரம்பத்தில், பரந்த வெளிகளில் பற்றைக் காடுகளில் மரத் தோப்புக்களில் அங்கொன்றும் இங்கொன்றுமாகக் காணப்பட்டதையும், காலப்போக்கில் அவற்றைச் சுற்றி மக்கள் குடியேறியதையும் அவற்றின் வரலாறுகள் உறுதிப்படுத்துகின்றன.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவற்றுக்கு மேலும் வலுச்சேர்க்கும் வகையிலேயே தெல்லிப்பளை துர்க்கையம்மன் கோயிலின் வரலாறும் அமைந்துள்ளது.

யாழ்ப்பாணத்திலுள்ள பெருங்கோயில்களுள் ஒன்றாகி அந்தக் கோயில் வளர்ந்து உயர்ந்தமை, இப்போது வாழ்கின்ற அடியார்கள் பலரின் நினைவுக்குட்பட்ட காலத்துக்கு உரியதென்றாலும், அதன் தோற்றம் அல்லது ஆரம்பம் கிட்டத்தட்ட இரண்டரை நூற்றாண்டுகளுக்கு முற்பட்டது.

ஆங்கிலேயர் இந்த நாட்டிலே கால் பதிப்பதற்கு முன்னர், ஒல்லாந்தராட்சி ஓங்கியிருந்த பதினெட்டாம் நூற்றாண்டின் மத்தியை அண்டிய காலப்பகுதியிலே தெல்லிப்பளையில் – வவுனாவத்தை என்ற குறிச்சியிலே, பழுதிலா உழவுத் தொழிலைத் தம் பரம்பரைத் தொழிலாகவும் மேன்மைகொள் சைவநீதியைத் தன் ஊனுக்கும் உயிருக்கும் உறுதி பயக்கும் நெறியாகவும் கொண்ட கதிர்காமர் என்னும் பெரியார் வாழ்ந்து வந்தார். எல்லாம் அவன் செயல் என்பதில் அசையா நம்பிக்கை கொண்டிருந்த அவர், இந்தியாவிலுள்ள திருத்தலங்களைத் தரிசிக்க விரும்பினார். காங்கேசன்துறையிலிருந்து தோணி மூலம் திருமறைக் காடு என்னும் வேதாரணியத்தை அடைந்தார். மறைக் காட்டீசரை வணங்கி, அங்கிருந்து, வாகனங்களின் உதவியை நாடாமல், நடந்து சென்றே திருக்கோயில்கள் பலவற்றில் அம்மையையும் அப்பனையும் தரிசித்து மகிழ்ந்தார். இறுதியில், புனித கங்கைக் கரையிலே காசி விஸ்வநாதப் பெருமானையும் விசாலாட்சி அம்பாளையும் தரிசித்தார். பத்து ஆண்டுகள் அங்கே தங்கியிருந்து, தமிழ், சமஸ்கிருத மொழிகளையும் நன்கு கற்று, சமய நூல்களைப் படித்தார். அங்குள்ள சொப்பனேஸ்வரி பீடத்தில், சகல கலைகளுடனும் பொலிந்திருக்கும் துர்க்காதேவியை வழிபட்டு, துர்க்காதேவி உபாசகரானார்.



1760 ஆம் ஆண்டளவில் அப்பெரியார் காங்கேசன்துறைக்கு மீண்டும் வந்தபோது துர்க்காதேவி இயந்திரமொன்றையும் திருமுகக் கெண்டி உருவத்தையும் கொண்டுவந்தார்.

துர்க்கை அம்பாள் இப்போது வீற்றிருந்து அருள்பாலிக்கும் இடம், இலுப்பைமரங்கள் நிறைந்த தோப்பாக அக்காலத்தில் விளங்கியது.

காங்கேசன்துறையில் தோணியிலிருந்து இறங்கிய கதிர்காமர், கீரிமலைக்குச் சென்று நீராடிவிட்டு, தென்கிழக்குத் திசையிலே தொடர்ந்து நடந்து இலுப்பைத்தோப்பை அடைந்த போது, அவருடைய உடல் தளர்ந்தது; மேற்கொண்டு நடக்க முடியாமல் நடை தளர்ந்தது. இலுப்பைத் தோப்பிலே அவர் இளைப் பாறியபோது, அவருடைய காட்சியில் அருட்சோதி ஒன்று தோன்றியது; அவர் கொண்டுவந்த யந்திரத்தை அந்த இடத்திலேயே ஸ்தாபிக்கும்படி ஆணையிட்டது.

துர்க்கா உபாசகரான கதிர்காமர், அந்தத் தாய் இட்ட அருட்கட்டளையை அகமகிழ்ந்து ஏற்றார். அம்பாள் கருதிய இடத்தைக் குறிப்பாலுணர்ந்து அந்த இடத்திலேயே இயந்திரத்தைப் பிரதிஷ்டை செய்து வழிபடத் தொடங்கினார் அவர்.

இலுப்பைத் தோப்பில் மழை, வெய்யில் போன்றவற்றிலிருந்து அந்த இயந்திரத்தைப் பாதுகாத்து வந்த கொட்டில், சில ஆண்டுகளின் பின்னர் கற்கோவிலாக உருமாறி 1820 ஆம் ஆண்டிலே கும்பாபிஷேகம் செய்யப்பெற்றுத் துர்க்கை அம்பாள் ஆலயமானது. பூசை நடக்கும் வேளைகளில் நாகபாம்புகள் வருவதும்கோவிலின் அர்ச்சகர் வைக்கும் பாலைப் பருகிவிட்டு, யாருக்கும் எவ்விதமான அச்சுறுத்தலும் விடுக்காமல் வெளியேறுவதும் அம்பாளின் பிரசன்னத்தை உறுதிப்படுத்துவதாகக் கருதப்பட்டன. விஜயதசமியின் போது மாவைக்கந்தன் இந்த ஆலயத்துக்கு எழுந்தருளி வன்னி வாழைவெட்டும் நிகழ்ச்சி 1829 ஆம் ஆண்டில் ஆரம்பமாகி இன்றும் தொடர்கின்றது.

தனிப்பட்ட ஒருவரின் முகாமையிலிருந்த இவ்வாலயம் 1948 ஆம் ஆண்டிலே தர்மகர்த்தா சபையின் பரிபாலனத்துக்கு உட்பட்டமை, 1965 ஆம் ஆண்டிலே 18பேர் கொண்ட நிர்வாகசபை, கோவிலைப் பரிபாலனம் செய்யத் தொடங்கியமை, 25 ஆண்டுகளுக்கு மேலாக சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, நிர்வாகசபைத் தலைவியாகத் தொடர்ந்து பணியாற்றியமை, ஆகியவை, அமைதியாக இருந்து, தன்னை நாடி வருபவர்களுக்குத் தன் அருட்பார்வையால் ஆறுதலளித்துக் கொண்டிருந்த அம்பாள், தன் "அருளாதிக்க" எல்லையை நானா திசைகளிலும் விஸ்தரிப்பதற்குத் திருவுளங்கொண்டு விட்டாள் என்பதைக் காட்டுவதாகக் கொள்ளலாம். அம்பாளின் அருட் சிறப்பைப் பல்வேறு சந்தர்ப்பங்களில் உணர்ந்து கொண்டவரும், கேட்டார்ப் பிணிக்குந் தகையவாய்க் கேளாரும் வேட்ப மொழியும் "சிறப்பாற்றல் பெற்றவருமான சிவத்தமிழ்ச் செல்வி இந்த நாட்டிலும், தென்னிந்தியா, சிங்கப்பூர், மலேஷியா முதலாம் வெளிநாடுகளிலும், ஆற்றிய இலக்கிய ஆன்மீகச் சொற்பொழிவுகள், இவ்வாலயத் திருப்பணிக்கும் ஆலயம் செய்கின்ற அறப்பணிகளுக்கும் தாராளமாக உதவியும் ஒத்துழைப்பும் வழங்க வேண்டும் என்ற உந்துதலை மக்களிடம் ஏற்படுத்துவதிற் பெரும் பங்கு வகித்தன. →



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY
JAFFNA

கோயில் அமைப்பு விதிகளுக்கு ஏற்ப உருவாக்கப்பட்ட கருவறை, அழகான விமானம், அலங்காரமும் அழகாகவும் அமைக்கப்பட்ட பரிவார மூர்த்திகளின் சிற்றாலயங்கள், அருளொளி வீசும் வசந்த மண்டபம், கண்களைக் கவரும் வண்ணத்தில் விண்ணுயர்ந்து எழுந்து நிற்கும் இராஜகோபுரம், தூய்மையான நீர் நிறைந்த துர்க்கா புஷ்கரணி என்னும் தீர்த்தத் தடாகம், மணிக்கோபுரம் சித்திரத் தேர்முட்டி முதலிய "திருவம்சங்க"ளுடன் திகழும் துர்க்காபுரத்தில் வீசும் தெய்வீகத் தென்றல் அங்கு செல்லும் அடியார்களின் உள்ளங்களை அம்பாளின் வருடும் தேவியின் தெய்வீகத்தில் திளைக்கச் செய்யும்.

ஆவணித் திருவோணத்தைத் தீர்த்தத் திருநாளாகக் கொண்டு பன்னிரண்டு நாள் ஆண்டுப் பெருந்திருவிழா நடைபெறுகின்றது. மாசி மாத இலட்சார்ச்சனை, கௌரி நோன்பு வரலட்சுமி பூஜை, நவராத்திரி விழா முதலியவை சிறப்பாகக் குறிப்பிடப்பட வேண்டியவை. ஒவ்வொரு செவ்வாய்க் கிழமையிலும் விசேட அபிஷேக ஆராதனைகள் இடம்பெறுகின்றன. ஆண்டுதோறும் பெரிய புராணம், கந்தபுராணம், திருவிளையாடற் புராணம் ஆகியவை படிக்கப்பட்டுப் பயன் சொல்லப்படுகின்றன. இத்துறையில் விருப்பமுள்ளோர் பலர் இடையறாது கலந்து கொள்கின்றனர். இருபது ஆண்டுகளாகப் பிரதம சிவாச்சாரியாராகப் பணிபுரிந்த சிவஸ்ரீ இ. கந்தரேஸ்வரக் குருக்கள் அவர்களுக்குப் பின், கடந்த சில ஆண்டுகளாகச் சிவஸ்ரீ கா. அகிலேஸ்வரக் குருக்கள் பிரதம சிவாச்சாரியாராகப் பணிபுரிகின்றார்.



ஆலயங்களெல்லாம் அறச்சாலைகளாக அமைய வேண்டும் என்ற அழகு மொழியை அட்சரம் தவறாமல் கடைப்பிடிக்கும் ஆலயங்களுள் முதலிடம் வகிப்பதும் முன்னுதாரணமாகத் திகழ்வதும் துர்க்கையம்மன் ஆலயமே! பக்தர்கள் செலுத்தும் காணிக்கைகள், நன்கொடைகள் போன்றவை கோவிலைச் சீராக நடத்துவதற்கும் நாளாந்தத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும் மட்டுமல்லாமல், பல்வேறுபட்ட மனித நேயப் பணிகளுக்கும் பயன்படுத்தப்படுகின்றன.

ஆதரவற்ற ஐந்து வயதுக்கு மேற்பட்ட சிறுமிகளுக்குத் தங்குமிடமளித்து, உணவூட்டி, கல்வியூட்டி, வாழ்க்கைக்குத் தேவையான பயிற்சிகளை அளித்து அவர்களை ஆளாக்கும் பெரும் பணியைத் துர்க்காபுரம் மகளிர் இல்லம் ஆற்றி வருகின்றது. தமிழ், ஆன்மிகம் சம்பந்தமான நூற்றுக்கணக்கான அரிய நூல்களைக் கொண்டுள்ள நூல் நிலையம் அறிவுத் தேடலில் ஈடுபடுவோருக்கும் ஆராய்ச்சியாளர்களுக்கும் பல்வேறுபட்ட நன்மைகளைச் செய்து வருகின்றது.

சிவத்தமிழ்ச் செல்வி அவர்களின் பெயரால் 1989 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட அறநிதியம், சமயம், பண்பாடு சம்பந்தமான நூல்களை வெளியிட்டுள்ளது. யாழ் போதனா வைத்தியசாலையின் இன்றியமையாத அவசரத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் பணமாகவும் பண்டமாகவும் நன்கொடை அளித்துள்ளது. யாழ் பல்கலைக் கழகம், உயர் தொழில்நுட்பக் கல்லூரி, கல்வியியற் கல்லூரி, பாடசாலைகள், முதியோர் இல்லங்கள், அநாதை இல்லங்கள் எனப் பலவகைப்பட்ட நிறுவனங்களுக்கும் பல்வேறு உதவிகளைச் செய்துள்ளது. சிவத்தமிழ்ச் செல்வி அன்னையின் இல்லம் முழுக்க முழுக்க இந்த நிதியத்திலேயே தங்கியிருக்கின்றது.

தான் கற்ற கல்வியையும் பெற்ற அனுபவங்களை துர்க்கை அம்மனின் தெய்வீகத் திருப்பணிக்காக அர்ப்பணித்து "நாம் கொடுக்கும் பணம் முழுவதும் நல்ல பல பணிகளுக்காகவே பயன்படுகின்றது" என்ற நம்பிக்கை, பக்தர்கள் உள்ளங்களிலும் உருவாகி உறுதியாகும் வகையிலே அனைத்துப் பணிகளையும் திட்டமிட்டு நிறைவேற்றிய அற்புதமான செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் அன்புப் பேழையின் மேல் அம்மை நினைவாலயம் நிறுவப்பட்டிருப்பதும் கோவில் வீதியில் அன்னாரின் உருவச்சிலை இடம் பெற்றிருப்பதும், வேறும் பல இத்தகைய தொண்டுகளில் ஈடுபடுத்துவதற்கென்பது திண்ணம்.

பெருக்காகவோ பெருமைக்காகவோ அல்லாமல் உருப்படியான ஆன்மீகத் தொண்டு செய்யவேண்டும் என்ற உயர்ந்த எண்ணத்துடன் நிர்வாக சபையில் இடம் பெற்றவர்கள் – ஆகம நெறிநின்று அனைத்துக் கிரியைகளையும் ஆற்றும் அந்தணப் பெருமக்கள் – மிகுந்த பொறுப்புணர்ச்சியுடனும் பணிவுடனும் கடமைகளைச் செய்துவரும் பணியாளர்கள் மக்கள் சேவையில் மகிழ்ச்சி அடையும் தெல்லிப்பளை இந்த இளைஞர்கள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துர்க்காதேவி பெண் தொண்டர்சபை போன்றவற்றின் உறுப்பினர்கள் – தாமாகவே முன்வந்து தேவையான உதவிகளைச் செய்யும் அடியார்கள் இவர்கள் அனைவரையும் தன் அன்பால் ஒன்றிணைத்து தன் அநுபவத்தால் வழி நடத்தி, தன் ஆற்றலால் மேலும் பலவற்றைச் சாதிக்க முனைகின்ற நிர்வாக சபைத் தலைவர், செஞ்சொற் செல்வர் திரு. ஆறு. திருமுருகன் ஆகிய அனைத்துத் தரப்பினரிடையேயும் நிலவுகின்ற மதிப்பு நல்லெண்ணம், ஆக்க பூர்வமான சிந்தனை, ஒத்துழைப்பு மனப்பான்மை ஆகிய எல்லாமே இத்திருத்தலத்தின் பக்திப் பிரவாகத்துக்கும் பண்பாட்டுப் பணிகளுக்கும் அரணாக நிற்கின்றன.

தேசமெல்லாம் அருளாட்சி செய்யும் துர்க்கை அம்பாள் தெல்லிப்பளையிலே கோயில் கொண்டதைக் கூறும் இந்தச் சுருக்க வரலாற்றை அருட்கவி சீ. விநாசித்தம்பி அவர்களின் கவிதையுடன் நிறைவு செய்வது பொருத்தமாகத் தோன்றுகின்றது.

மன்னுமிச் சிங்கமாதம்
　　மகாகும்பா பிஷேகம் ஏற்றுத்
தன்னிக ரில்லாச் சோதி
　　தருமுகம் காட்டி எம்மை
நன்னிலைக் கிழுக்கும் தாயே
　　நயந்தநின் கோயில் வாயில்
உன்னிவந் தடைந்தார்க் குள்ளம்
　　உருகிமெய் யரும்பு மம்மா

ஆத்தாளே நின்வி ழாக்கள்
　　ஆகமப் பூசை யாலே
ஏத்திடு மெங்கள் துன்பம்
　　எல்லாமே தீரு மம்மா
கூத்திடும் தாயே நின்மெய்க்
　　கோலத்தை மனத்திற் கண்டேன்
தோத்திரம் செய்தேன் உன்றன்
　　தொண்டர்கள் வாழி வாழி.

## நல்ல காரியங்களைச் செய்ய முற்படும்போது "ஓம் சாந்தி, சாந்தி, சாந்தி" என்று சொல்லுவதன் தத்துவம் என்ன?

மனிதனுக்கு ஒரு வேலையைச் செய்ய பாமர அறிவும் தேவைப்படுகிறது. பாமர அறிவைத் தனது கல்வியினால் பெற்று அவன் ஒருவன் காரியம் செய்ய இறங்கும்போது அதனால் நல்ல பலன் கிடைக்க சூட்சும அறிவைத் தூண்டிக்கொள்ள வேண்டியிருக்கிறது. "ஓம்" என்பது மேலான உண்மைப்பொருளைக் **(Supreme Reality)** குறிப்பிடுவது அதைச் சொல்லுவதன் மூலம் மனம் உயர்ந்த நிலைக்கு எழுகிறது.

சாந்தி என்பது அமைதியைக் குறிக்கும் சொல்லாகும். நம்மை வழிப்படுத்தும் சக்திகளை அமைதியைத் தரும்படி வேண்டிக்கொள்வதற்கே 'சாந்தி' என்று சொல்கிறோம். மூன்றுமுறை சாந்தி என்று சொல்லுவது நமக்குத் தடைகளை ஏற்படுத்தக்கூடிய மூன்று வாய்ப்புக்களிலிருந்து நம்மைக் காத்துக்கொள்ள வேண்டும் என்று குறிப்பிடுவதற்கே ஆகும். அந்த மூன்று தடைகள் என்ன?

**1. ஆதிதைவிகம் 2. ஆதிபௌதிகம் 3. ஆதிபாத்மிகம்** ஆதிதைவிகம் என்பது மின்னல், இடி, மழை பூகம்பம் போன்ற இயற்கையினால் ஏற்படக்கூடிய கேடுகள் அதனால் இதைத்தவிர்க்க முதன்முறை சாந்தி என்று சொல்லும்போது உரக்கச் சொல்லுகிறோம். ஆதிபௌதிகம் என்பது சுற்றிலும் உள்ள சத்தம் மிருகங்கள், பறவைகளால் ஏற்படும் தொந்தரவு பூச்சிகளின் உபத்திரவம் போன்ற இடையூறுகளைக் குறிப்பிடுவது. இத்தகைய சூழ்நிலையினால் ஏற்படும் தடையை வெல்ல சற்று மெதுவாகவே இரண்டாவது சாந்தியைக் கூறுகின்றோம். மூன்றாவதான ஆத்தியாத்மிகம் என்பது நம்முடைய உடலின் நோயாலும் உள்ளத்தின் சஞ்சலத்தாலும் ஏற்படும் தடையைக் குறிப்பிடுவது இதைக் கடந்து அமைதிப்படுத்திக்கொள்ள மூன்றாவது 'சாந்தி'யை மிக மெதுவான இரகசியமான குரலில் சொல்லிமுடிக்கிறோம். கண்ணை மூடிக்கொள்ளும் இந்தப் பிரார்த்தனையை இப்படி முறைப்படி செய்வதனால் சொல்பவருக்கும் அவரைச் சேர்ந்தவருக்கும் நன்மையும் மன அமைதியும் கிடைக்கும்.

சுவாமி ஏ. பார்த்தசாரதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாவலர் சரிதமோதும் நற்றமிழ் மாலை

கவிஞர் திரு. இராசையா குகதாசன்

(இந்துசாதனம் – 2010 ஆடி – 11 ஆம் பக்கத்தின் தொடர்ச்சி...)

284.சென்னையைச் சேர்ந்த பின்னர் சிறப்புறப் பரிசோ தித்தே
வன்னவன் புடைய ரோது வாசகம் கோவை யாரும்
இன்னும்பல் நூல்க ளும்ச தாசிவம் பிள்ளை பேரில்
அன்னவர் விடவே யாண்டு வாயிற்று முப்பத் தேழு.

285.தரையணி செய்ய வென்றே தவமகர் பிள்ளை பேரில்
விரைவொடு தொகுத்துச் சென்னை வெளியிடு
நூல்க ளெல்லாம்
வரைமுறை பார்த்தே ராம நாதவப் புரத்தை யாளும்
துரையவர் பொன்னு சாமித் தேவர்நா வலரைக் கொண்டே.

286.நச்சினர்க் கினிய ரென்பார் நற்றிருக் கோவை யார்க்கும்
இச்சிடு குறட்கு மந்த அழகரி னுரையுந் தர்க்க
மெச்சுசங் கிரக மன்னம்பட் டியத்தையும் பரிசோ தித்தே
அச்சிடுமதற்கு நாங்க ளளிப்பமுள் செலவு என்றார்.

287.அன்னவர் வேண்டு கோளை அகத்துவை ப்பசி ரௌத்(தி)ரி
முன்னுள விரண்டு நூலும் முழுதுறப் பரிசோ தித்தே
பின்னரங் கவையி ரண்டும் பிரிந்து வைகாசி மாதம்
நன்குற வச்சி லேற்றி நாவலர் வெளியிட் டார்கள்.

288.விரிவுரை நோக்கி யவ்வூர் வித்துவான் மார்வி யந்தே
திரிசிர புரமீ னாட்சி சுந்தரம் பிள்ளை யோடு
பரிதிரு தியாக ராசச் செட்டியா ரவருஞ் சேர்ந்தே
பெரியரி பாயி ரத்தைப் புகன்றழ கூட்டி னார்கள்.

289.சிதம்பரப் பதியிற் சைவப் (பி)ரகாச வித்யா சாலை
நிதம்பயன் நல்கு மாறு நிறுவிட வேண்டு மென்று
மதன்பய னின்ன தென்று முதலிரு திறத்தி னாரும்
சதம்பெறும் பயன்கு றித்தும் ரௌத்ரிவை காசி மாதம்.

290.தமிழக மெங்குஞ் சைவம் தழைத்தெழ வேது வாகச்
சிமிழனை சைவர்க் காகச் சிறந்த யாழ்ப் பாண நல்லூர்
தமிழுரை நாவ லர்தம் விக்கியா பனமீ தென்றே
அமிழ்தெனு மகிமை யாவும் அச்சினில் வெளியிட் டார்கள்

291. திருநிறை மயிலாப் பூரிற் திகழண்ணா மலையா தீனம்
வருசின்னப் பட்ட மான வறுமுக தேசி கர்தாம்
ஒருமுறை பார்க்க வேண்டி ஓதினர் சிலரை விட்டே
திருவுளப் பாங்கு தன்னைத் தெரிவித்தார் நாவ லர்க்கே

292. கண்டுரை யாடு நாவர் புலமையும் சித்தாந் தத்தே
திண்டிற லறிவுந் தெய்வத் தமிழ்மொழித் திறனுஞ் சேரக்
கண்டுணர் தம்பி ரானார் தரித்தருத் திரசஞ்சியத்தைத்
தெண்டிரை யுலகர் காணத் திருவுடல் சாத்தி னார்கள்.

293. தன்றன கருமந் தேக்கித் தானுறு சென்னை நீங்கி
ஒன்றிய மனத்தி னோடு உறுதலம் பலவும் போற்றித்
தென்றிசை நோக்கி யாடுஞ் சிதம்பர மிறைஞ்சிப் போந்து
சென்றுயர் பதியாம் திருவா வடுதுறை யதைய டைந்தார்.

294. தங்கிடு காலை யுபய சந்நிதா னங்க ளெல்லாம்
பொங்கெழிற் தமிழி னோடு பொலியுசித் தாந்த நூலிற்
தங்குமுட் பொருட்கள் தேடும் தங்களா ராய்ச் நோக்கி
அங்கவ ரிருந்த போது அகமறி யாதீ னத்தார்.

295. உம்முளம் விரும்பு மாறே உயர்சைவ நூல்க ளாக்கல்
அம்பொரு ளுரைகள் செய்த லருங்கல்விச் சாலை நாட்டல்
நம்மரும் பிரமா ணங்கள் நயவுரை யவைக ளெல்லாம்
தம்மட மிருந்து கொண்டே தாபிக்க வேண்டிக் கொண்டார்.

296. யாங்கணும் வித்(தி)யா சாலை நடல்பிர சங்க மாற்றல்
தாங்குமிவ் வேலை யாவுந் தன்னுளப் படியே செய்தல்
தீங்குறு மென்றே யெங்கோன் திருவுளம் நினைந்து பின்னே
பாங்கொடவ் வேண்டு கோளைப் பரிவுடன் மறுத்துச்
சின்னாள்

297. வாழ்ந்தவர் நீங்கிச் சென்றே வழியுள தலங்கள் தோறும்
தாழ்ந்துநின் றிறைஞ்சி நாகைக் காரோணந் தனுக்கு வந்தே
சூழ்ந்தவர் கேட்கச்சின்னாள் சிவப்பிர சங்க மாற்றி
வீழ்ந்துநன் கிறைஞ்சி நிற்க விடைகொடுத் ததன்பின்னாலே.

298. துன்மதி ஆயிரத்தெண் ணூற்றறு பத்தி ரண்டில்
அன்பரங் கடைந்த வேலை யனைத்தையும் முடித்துக்
கொண்டே
பொன்புற வச்சி லேற்று புத்தக மவைக ளோடு
நன்கொரு தோணி யேறி யாழ்நக ரதைய டைந்தார்.

### சிதம்பரத்தில் பாடசாலை 1862 – 1863)

299. இங்கிவர் வந்தே சைவப் (பி)ரகாச வித்(தி)யா சாலை
யங்கொரு சபையைக் கூட்டி யாசையிற் சிதம்ப ரத்தே
தங்கரும் பாட சாலை தாபிக்குந் தேவை மற்றுஞ்
சங்கதி யெடுத்தே சைவப் பிரபுக்கள் முன்மொ ழிந்தார்.

300. புண்ணிய ரின்ன வாறு புகன்றதைக் கேட்டு மாந்தர்
எண்ணுமிக் கருமம் நீவி ரியற்றிட வேண்டு மென்றே
கண்ணெனுஞ் சைவ மேன்மை காசினி யுணர்த்தத் தங்கை
நண்ணரு பொருளை யள்ளி நாவலர் கையி லீந்தார்.

301. பன்னுநல் லாடித் திங்கள் பருத்திநன் நகரி லெய்தி
நன்னருள் புரியுஞ் சித்திவி நாயகர் கோவில் நின்றே
தன்னுள வாசை யெல்லாம் தக்கவர் முன்புகூற
அன்னவ ரகம கிழ்ந்தே யவர்பொரு ளுபக ரித்தார்.

302. பருத்திநன் நகரு ளோரும் பண்புடைபு லோலி யாரும்
விருத்திசெய் வர்த்த கத்தில் வித்தியா சாலைக் கென்றே
அருத்தமுள் மகிமை வைத்தே யதன்வரு மான மெல்லாம்
திருத்தவர் பணிகட் காகச் சிதம்பரந் தரவ ளித்தார்.

303. இருந்திடு காலை வந்தே யாங்குறை யன்ப ரெல்லாம்
தருந்திரு சாலை முன்போல் தண்சைவப் பிரசங்கங்கள்
பொருந்திடு தலைப்பெ டுத்தே பொருளது விளங்கி நாங்க
ளருந்திடு மாற ளிக்க வடிபணிந் திறைஞ்சி நின்றார்.

304. அருஞ்சைவப் பிரசங் கங்க ளாற்றலிற் கால மெல்லாம்
இருந்திடல் வேண்டு மென்னு மிவருளக் கருத்துத் தேக்கி
வருந்தியங் கழைத்த பேரும் வளவுல குயிருஞ் சேர்ந்தே
யருந்திடப் பிரசங் கத்தை யாற்றினர் மழையை யொப்ப.

### வைதிகத்தைவிட சைவம் உயர்ந்தது (1862 – 1863)

305. அரனது சமய தீட்சை அதிலும்வி சேட தீட்சை
பரிநிரு வாண தீட்சை பரவா சாரி யாருக்
குரியபி ஷேக மெல்லாம் உலகத்திற் பெற்றி ருந்தோர்
வரிசிவ தீட்சை யில்லா வைதிகப் பிரா மணர்கள்.

(வளரும்...)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவசித்தாந்தம்

(இந்துசாதனம்– ஆடி மாதம் 2010 – 06ஆம் பக்கத் தொடர்)

முனைவர் ஆ.ஆனந்தராசன்

**உடம்பில் அறிவு நிகழும் இடமே ஆன்மா உள்ள இடம்**

**130. ஓர் ஐயத்தைத் தெளிவிக்க வேண்டுகிறேன். இந்த ஐந்தவத்தைகளில் ஆன்மா புருவநடு, கண்டம் முதலிய ஓரோர் இடத்தில் மட்டுமே இருப்பதாகக் கூறினீர்கள். ஆன்மா வியாபகப் பொருள். ஆதலால் எங்கும் நிறைந்திருத்தலே அதற்கு இயல்பு. ஓரிடத்தில் மட்டும் இருப்பதும், அவ்விடத்தை விட்டு நீங்குவதும், மீண்டும் அவ்விடத்திற்கு வந்து சேர்வதும் ஆகியவை இடம் என்ற எல்லைக்கு உட்பட்ட சிறு பொருள்களாகிய ஏகதேசப் பொருள்களுக்கே கூடும். வியாபகப் பொருளுக்கு அவை இயல்பல்ல. எனவே ஆன்மா ஓரோர் இடத்தில் இருப்பதாகவும் இறங்கியும் ஏறியும் வேறு வேறு அவத்தைகளை அடைவதாகவும் கூறுதல் எவ்வாறு பொருந்தும்?**

இந்த ஐயம் உனக்கு மட்டுமல்ல சிந்தனை செய்கின்ற எல்லோருக்கும் எழக் கூடியதுதான்.

ஆன்மா வியாபகப் பொருளாயினும் அதன் வியாபகம் முழுவதையும் ஆணவ மலம் மறைத்து நிற்கின்றது என்பதை ஓர் உவமையில் வைத்து முன்னே விளக்கியுள்ளோம். அதாவது, ஒரு குளத்தின் நீர்ப் பரப்பு முழுவதையும் பாசி மூடியிருக்கு மாயின் நீரின் இருப்புச் சிறிதும் தோன்றாது.

அந்நிலையில், எந்த இடத்தில் கல்லெறி பட்டுப் பாசி விலகுகிறதோ அந்த இடத்தில் மட்டும் நீரின் இருப்புச் சிறிது புலப்படும். அதுபோல் ஆன்மா வியாபகப் பொருளாயினும் எந்த இடத்தில் கருவிகள் செயற்பட்டு அறிவு விளங்குகிறதோ அந்த இடத்தில் மட்டுமே ஆன்மாவின் இருப்பு விளங்குவதாகும். அந்த இடமே ஆன்மா இருக்கும் இடம் என்று சொல்லப்படும்.

உடம்பில் அவத்தை உறுதற்குரிய இடங்களில் கருவிகள் செயற்பட்டும் மடங்கியும் நிற்பதால் அவ்விடங்களில் ஆன்ம அறிவு விளங்கியும் குறைந்தும் வர, அதை வைத்து, ஆன்மா இழிந்தும் ஏறியும் பல அவத்தைகளை அடைவதாக நூல்களில் சொல்லப்படுகின்றது.

**சுத்தநிலையில் நிகழும் ஐந்தவத்தைகள்**

**131. உடம்போடு கூடிய சகல நிலையில் ஆன்மா ஆணவ மலச் சார்பினால் கேவல நிலைகளை அடையும் என்று காட்டினீர்கள். அதுபோலச் சகல நிலையில் வாழும்போது ஆன்மா திருவருட் சார்பினால் பல நிலைகளை அடையுமோ?**

ஆம். திருவருட் சார்பினால் பக்குவ ஆன்மா பல நிலைகளைத் தலைப்படுதல் உண்டு.

ஆன்ம அறிவைத் தடை செய்திருந்த ஆணவ மலத்தின் சக்தி தேய்வடையும் காலமே ஆன்மா பக்குவமுறும் காலமாகும். அந்த நிலையில் ஆன்மாவிடத்தில் திருவருள் பதியும். ஆன்மா பாசங்களின் நீங்கித் திருவருளைப் பற்றி நிற்கும். இது சுத்த நிலையாகும்.

சுத்த நிலையிலும் ஐந்தவத்தை நிகழும். அவைதாமும் சாக்கிரம் முதலிய பெயர்களையே பெறும். ஆயினும் நின்மலம் என்ற அடைமொழி கொடுக்கப்பெற்று நின்மல சாக்கிரம், நின்மல சொப்பனம், நின்மல சுழுத்தி, நின்மல துரியம், நின்மல துரியாதீதம் எனச் சொல்லப் பெறும்.

நின்மலம் என்பதற்குப் பதிலாகச் சுத்தம் என்ற அடைமொழியைச் சேர்த்துச் சுத்தசாக்கிரம், சுத்த சொப்பனம் முதலிய பெயர்களாலும் அவை வழங்கப்பெறும்.

ஆன்மா மலம், மாயை, கன்மங்களாகிய மாசுகளின் நீங்கித் திருவருளில் அழுந்தும் நிலைகள் ஆதலின் அதனைக் குறிக்கும் வகையில் நின் மலம், சுத்தம் என்ற அடைமொழிகள் சேர்க்கப்பட்டன என்பது அறியத்தகும்.

கேவல அவத்தையும் சுத்த அவத்தையும் ஒன்றுக் கொன்று நேர் மாறானவை.

கேவல அவத்தை ஆன்மாவுக்கு அமைந்துள்ள மாயா கருவிகளின் கூடுதல் குறைதல்களால் நிகழும். சுத்த அவத்தை கருவிகள் காரணமாக நிகழாமல் இறைவன் திருவருள் காரணமாக நிகழ்வது.

எனவே மெய்யுணர்வு இல்லாத உலகோர் கருவிகள் காரணமாக வரும் கேவல ஐந்தவத்தைகளை அடைவர் என்பதும், மெய்யுணர்வைப் பெற்ற பக்குவர் திருவருள் வழியாக நனவுமுதலிய சுத்த ஐந்தவத்தைகளை அடைவர் என்பதும் விளங்கும்.

மெய்யுணர்வு இல்லாதோரும் கருவிகள் நீங்கப் பெறுபவராய் உள்ளனர். மெய்யுணர்வு பெற்றவரும் கருவிகள் நீங்கினவராய் உள்ளனர். அவ்வாறாயின், கருவிகள் நீக்கத்தில் இவ்விருவர் நிலைக்கும் என்ன வேறுபாடு எனில்,

மெய்யுணர்வு இல்லாதவரிடத்தில் தத்துவ தாத்து விகங்கள் ஆகிய கருவிகள் செயற்படாமல் தாமாக நீங்குகின்றன.

மெய்யுணர்வு பெற்றவர்பால் ஐம்பொறி முதலிய அக்கருவிகள் செயற்படவே செய்யும். அவ்வாறு செயற்பட்டபோதும் அவர் அக்கருவிகளைத் தம்மின் வேறாக உணர்ந்து, அவ்வுணர்வால் அவற்றில் அழுந்தாமல் – அவற்றின் வழிச் செல்லாமல் திருவருளில் அழுந்தி நிற்பர். அதனால் அவர் அக்கருவிகளை நீக்கினவர் ஆவர். →



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே கருவிகள் செயற்படாமல் தாமாக நீங்குதல் உலகரிடத்தும், கருவிகள் செயற்பட்டபோதிலும் அவற்றின் வழி நில்லாமல் அவற்றை அறிவால் நீங்குதல் பக்குவரிடத்தும் உள்ள வேறுபாடாம் என்பது விளங்கும்.

கருவிகள் தாமாக நீங்கினால் ஆன்மா மலச் சார்பையே அடையும். கருவிகளை வேறாக உணர்ந்து, அவற்றின் நீங்கினால் திருவருட் சார்பையே அடையும் என்பதை நீ உணர்வாயாக.

சுத்த அவத்தைகளை மேலும் விளக்கிக் கூறுதற்கு இஃது இடம் அன்று. பின்னே அவற்றை நீ விளக்கமாகத் தெரிந்துகொள்ளலாம்.

**உயிருக்குப் பொதுவியல்பு**

**132. சைவ சித்தாந்த முறையில் உயிருக்குக் கூறப்படும் பொதுவியல்பு யாது?**

உயிர் ஆணவம் முதலிய மும்மலங்களின் சார்பினால் பிறப்பு, இறப்பு முதலிய நிலைகளை அடைகிறது. விழிப்பு, உறக்கம், நினைப்பு, மறப்பு முதலிய நிலைகளை மாறி மாறி அடைகிறது. இன்ப துன்ப மயக்கங்களை எய்துகிறது.

இவ்வாறு பாசங்களோடு கூடி ஒரு நிலையில் நில்லாது பல நிலைகளில் மாறி மாறிச் சுழலுதல் உயிருக்குப் பொதுவியல்பாகும். சுருங்கக் கூறின், மலத்திற் கட்டுண்டிருக்கும் பெத்த நிலையே உயிருக்குப் பொதுவியல்பாகும்.

**உயிருக்கு உண்மை இயல்பு**

**133. சைவ சித்தாந்த முறையில் உயிருக்குக் கூறப்படும் தன்னியல்பு அல்லது உண்மையியல்பு யாது?**

மும்மலங்களினின்றும் நீங்கிப் பதியாகிய சிவத்தைச் சார்ந்து ஒரு நிலையான தன்மையை எய்தி, அலைவற்று, எல்லையற்ற பேரின்ப வெள்ளத்தில் மூழ்கியிருத்தலே உயிருக்குத் தன்னியல்பு அல்லது உண்மையியல்பு ஆகும். சுருங்கக் கூறின், முத்தி நிலையே உயிருக்கு உண்மையியல்பாகும்.

## 4. தளை (ஆணவம்)

**அறியாமை**

**134. அறியாமை என்றால் என்ன?**

அறியாமையாவது உண்மையை அறியாதிருத்தல். இன்னும் விளக்கமாகக் கூறினால், சைவ சித்தாந்தம் கூறும் பொருள்களாகிய ஆன்மா, கடவுள், தளை ஆகிய முப்பொருள் பற்றிய உண்மைகளை அறியாதிருத்தலாம்.

இந்த உடம்பினுள் உயிர் என்ற ஒரு தனிப்பொருள் இல்லை என்று சாதிப்பது, தன்னை உணராத அறியாமை. 'எல்லாம் வல்ல ஒரு பேராற்றல் தான் என்னை நடத்துகிறது" என்பதை நம்பாமல் வாழ்வது, தனக்கு மேல் உள்ள இறைவனை உணராத அறியாமை. வினையாவது மறுபிறப்பாவது? அவையெல்லாம் வெறும் புனைந்துரை என்று வாதம் செய்வது, தன்னைப் பிணித்துள்ள தளையை உணராத அறியாமை. இங்ஙனம் அறியாமை உயிர்களிடத்தில் சிறிய அளவிலும் பெரிய அளவிலுமாக வெவ்வேறு விதங்களில் அமைந்திருக்கிறது.

இந்த அறியாமை வடமொழியில் அஞ்ஞானம் எனப்படுகிறது.

அறியாமையில் இன்னொரு வகை உண்டு. மேலே கூறியது பொருளின் இருப்பையோ, அன்றி அதன் இயல்பையோ முழுதும் அறியாதிருக்கின்ற நிலை. இன்னொரு நிலையாவது, பொருளின் இயல்பைச் சரியாக உணராமல் தவறாக,, மாறாக உணர்ந்து கொள்ளுகிறநிலை. அஃதாவது கயிற்றைப் பாம்பாகக் காணுகிற நிலை; கானலை நீராகக் கருதுகிற நிலை; நட்டுள்ள கல்லை மனித உருவமாகப் பார்க்கின்ற நிலை; அற்பமான பொருளை உயர்ந்த பொருளாக மதிக்கின்ற நிலை; உயர்ந்த பொருளை அற்பமாக நினைக்கின்ற நிலை.

இவ்வாறு மாறி உணரும் அறிவு திரிபுணர்வு அல்லது மயக்கவுணர்வு எனப்படும். வடமொழியில் இதனை விபரீத ஞானம் என்பர். இங்ஙனம் திரிபாக உணர்வதும் அஞ்ஞானம் என்றே கொள்ளப்படும்.

எனவே அஞ்ஞானத்தில் இருவகை உண்டு என்பது விளங்கும். ஒன்று, முழுதும் அறியாதிருப்பது. மற்றொன்று, மாறி உணர்வது. இவ்விரண்டுமே பொதுவாக அறியாமை அல்லது அஞ்ஞானம் என்றே கூறப்படும்.

**135. அறிவுடைப் பொருளாகிய உயிரிடத்தில் அறியாமை இருப்பதும் இயற்கைதான் என்று கொண்டால் என்ன?**

உயிர்களாகிய நம்மிடத்தில் அறிவும் இருக்கிறது. அறியாமையும் இருக்கிறது. அறிவும் அறியாமையும் தம்முள் மாறுபட்ட இரு தன்மைகள்.

மாறுபட்ட இரு தன்மைகள் ஒரு பொருளின்கண் இயற்கையாகப் பொருந்தியிருக்க இயலாது. ஒரு தன்மைதான் அப்பொருட்கு இயற்கை; மற்றொரு தன்மை அதற்குச் செயற்கை என்றே கொள்ளுதல் வேண்டும்.

எடுத்துக்காட்டாக, நீருக்குத் தண்மைதான் இயற்கை. சில நேரங்களில் நீர் வெதுவெதுப்பாக இருக்கும். அவ்வெம்மை நீருக்குச் செயற்கையேயன்றி இயற்கையன்று. செயற்கையான வெம்மை நீரைப் பற்றியிருக்கிறது என்றால் அதற்கு ஒரு காரணம் இருத்தல் வேண்டும். நெருப்பின் சேர்க்கைதான் அக்காரணம். அதுபோல,

அறியும் தன்மையுடைய ஆன்மாவுக்கு அறிவுதான் இயற்கை. இயற்கையான அவ்வறிவு எக்காலத்திலும் இடையீடு இன்றி நிகழ்தல் வேண்டும். ஆயின், அவ்வாறு நிகழாது அவ்வறிவு ஒரு காலத்தில் நிகழ்ந்தும், மற்றொரு காலத்தில் நிகழாதும், ஓரிடத்தில் நிகழ்ந்தும் மற்றோர் இடத்தில் நிகழாதும் இருக்கக் காணுகிறோம். ஆன்மாவின் அறிவிற்கு அஃது இயற்கையன்று; செயற்கையே யாம்.

செயற்கை எதுவாயினும் அது ஒரு காரணத்தின் வழியாகவே நிகழும். ஆகவே அறியும் தன்மையை இயற்கையாகவுடைய ஆன்மா அறியாமையுடையதாய் நிற்பதற்குக் காரணமாக ஒரு பொருள் இருத்தல் இன்றியமையாதது.

**136. மாயையின் காரியமாகிய உடம்பின் சேர்க்கையால்தான் உயிருக்கு அறியாமை உண்டாகிறது என்று சிலர் கூறுவர். அது பொருந்துமா?**

உடம்பு சோர்வுற்றுக் கிடக்கும் உறக்க நிலையிலும், உடம்பு நீங்கிய இறப்பிலும் உயிருக்கு அறியாமை நிகழ்கிறது →



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதையும், உடம்பு வலிமையுற்றுச் செயற்படும் விழிப்பு நிலையில் அறிவு நிகழ்கிறது என்பதையும் அனுபவமாகக் காண்கிறோம்.

உடம்பின் சேர்க்கையால் உயிருக்கு அறிவு நிகழுமே யன்றி அறியாமை நிகழாது என்பது இதனால் தெளிவாகும்.

உடம்பு முதலியனவாய் அமையும் மாயை உயிர்களுக்கு விளக்கத்தைத் தரும் என்று சைவ சித்தாந்தம் கூறுவது, மற்றைய மதங்களில் கூறப்படாத ஒரு புதுமையான கருத்தாகும்.

"மாயை இருளன்று; விளக்கு" என்பார் மெய்கண்டார். "மாயாதனு விளக்கு" என்ற அவரது சொற்கள், மாயை அறிவை விளக்குவதன்றி அறிவை மயக்குவதன்று என்ற கருத்தைப் புலப்படுத்தி நிற்கும்.

மாயையிலிருந்து உடம்பும் உலகமும் உயிர்களின் நன்மை கருதி இறைவனால் தரப்பட்டன. இதனை உணராது சிலர் உடம்பும் உலகமுமே தமக்குத் தீங்கு தருவனவாகக் கருதி அவற்றைப் பகைப் பொருளாகவே பார்ப்பர்; பலவாறு பழிப்பர்.

உடம்பு எந்த நோக்கத்தோடு தரப்பட்டதோ அந்த நோக்கத்தை அறியாது, அதனால் பெறத்தக்க நலத்தைப் பெறுதற்கு அதனைப் பயன்படுத்தாது, அதனையே பெரிதாக மதித்து அதில் அழுந்துதல்தான் குற்றமே தவிர அதனை இறைவன் தந்ததில் எந்தக் குற்றமும் இல்லை.

எனவே, உடம்பின் சேர்க்கையால் உயிருக்கு அறிவு மறைக்கப்பட்டு அறியாமை உண்டாகிறது என்பது சிறிதும் பொருந்தாத கூற்றாகும்.

**137. கன்மமே அறிவைத் தடை செய்து அறியாமையை உண்டாக்குகிறது என்று கொண்டால் என்ன?**

"பேதைப் படுக்கும் இழவூழ்" என்று திருவள்ளுவரும் இக்கருத்துப்படக் கூறியுள்ளார் அன்றோ?

திருவள்ளுவர் ஊழ்பற்றிக் கூறும்போது "பேதைப் படுக்கும்" என்று மட்டுமா கூறினார்? அறிவை உண்டாக்கும் என்றும் எடுத்துக்கூறியுள்ளாரே. "அறிவகற்றும் ஆகலூழ் உற்றக் கடை" என்ற எஞ்சிய பகுதியை நீ கவனிக்கவில்லை போலும்.

இவ்விரண்டையும் சேர்த்து நோக்கினால் கன்மம் பயன் கொடுக்கும் முறை இன்னது என்பது விளங்கும்.

கன்மம் தன்னைச் செய்தவனுக்கு நன்மை வரும் முறையிலோ, அவன் தனக்குக் கேடு தேடிக் கொள்ளும் வகையிலோ அவனது அறிவைத் தூண்டி ஏதேனும் ஒரு செயலில் ஈடுபடுத்தி அதன் வழியாக நல்லதும் தீயதுமாகிய தன் பயனைக் கொடுக்கும் என்பதே இக்குறட்பாவில் கூறப்பட்டுள்ளது.

எனவே, கன்மம் அறிவைத் தூண்டிச் செயற்பட வைக்குமேயன்றி அறிவைத் தடைசெய்து அறியாமையை உண்டாக்காது என்பதை அறிவாயாக.

ஆகவே கன்மத்தை அறியாமைக்குக் காரணமான பொருளாகக் கூறுவது பொருந்தாது.

இதனால், கன்மமும் இதற்கு முன்னே கூறிய உடம்பாகிய மாயையும் என்ற இவ்விரண்டிற்கும் வேறாய் உயிரின் அறிவைத் தடை செய்யும் பொருள் ஒன்று இருத்தல் வேண்டும் என்பது புலனாகும். அந்தப் பொருளே ஆணவ மலம் எனப்படுகிறது.

**ஆணவ மலத்தின் தொடர்பு**

**138. இந்த ஆணவ மலத்தின் தொடர்பு உயிருக்கு எவ்வாறு ஏற்பட்டது? ஆணவம் வந்து உயிரைப் பற்றியதா? அல்லது, உயிரே சென்று ஆணவத்தில் வீழ்ந்ததா?**

முதன் முதலில் உயிர்கட்கு ஆணவம் இல்லை என்றும், ஆணவத்தின் தொடர்பு பின்பு தான் ஏதோ ஒரு காலத்தில் இடையில் ஏற்பட்டது என்றும் கருதிக்கொண்டு நீ இவ்வாறு கேட்கிறாய்.

அநாதியில் உயிர்கட்கு ஆணவம் இல்லை என்றால் எல்லாவுயிர்களுக்கும் இறைவனைப் போலே தூய அறிவு உடையனவாய் இருந்திருக்கும் என்றே கொள்ளுதல் வேண்டும். அத்தகைய தூய அறிவுடைய உயிர்கள் தமக்குத் தீங்கு தருவதாகிய ஆணவத்தை தாமே சென்று பற்றி யிருக்குமா?

தமக்குத் தீங்கு வரும் என்று அறியாததால் ஆணவத்தைப் பற்றின என்று கூறினால் உயிர்களிடத்து அறியாமையிருந்தது என்பதை ஒப்புக்கொள்ள வேண்டிவரும். ஆணவம் பற்றுவதற்கு முன்னால் உயிர்களிடத்து அறியாமை எப்படி வந்தது? தூயவாய் இருந்த உயிர்களிடத்து அறியாமை எப்படி இருக்க முடியும்? ஆகவே தூய அறிவுடைய உயிர்கள் சென்று ஆணவத்தைப் பற்றியிருக்க முடியாது என்ற முடிவுக்கே வர வேண்டியுள்ளது.

இனி, ஆணவம் வந்து உயிர்களைப் பற்றியிருக்குமோ எனில், ஆணவம் சடம் ஆகையால், அது தானாக உயிர்களைப் போய்ப் பற்றியிருக்க மாட்டாது.

இனி மூன்றாவது பொருளாகிய முதல்வன் உயிர்களை ஆணவத்தில் தள்ளியிருப்பான் என்றோ, ஆணவத்தை உயிர்களோடு கூட்டியிருப்பான் என்றோ கொள்ளலாமா? எனின், அவன் நன்மையே வடிவானவன்; தீமையேயில்லாத வன். அப்படிப்பட்டவன் உயிர்கட்குத் தீங்கு பயக்கும் இச் செயலைச் செய்திருக்க மாட்டான்.

ஆதலால், ஆணவம் ஒரு காலத்தில் வந்து உயிர்களைப் பற்றவும் இல்லை. உயிர்கள் சென்று ஆணவத்தில் விழவும் இல்லை. இவ்விரண்டையும் இறைவன் கூட்டுவிக்கவும் இல்லை.

முடிவாகச் சொன்னால், உயிர்கள் ஆணவம் இல்லாமல் இருந்த காலமேயில்லை. உயிர்கள் என்று உண்டோ அன்றே அவற்றோடு ஆணவம் கூடித்தான் உள்ளது என்பதுதான் சைவ சித்தாந்தம்.

வளரும்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இல்லறம் என்பது நல்லறமாகும்

நயினை நா. யோகநாதன், B.A.

அற்புதமான இந்த மனித வாழ்க்கையை ஆண்டவன் நமக்குக் கொடுத்திருக்கின்றார். இவ்வாழ்விற் கருத்தொருமித்த காதலர் ஆகி, ஆணும் பெண்ணும் சேர்ந்து அன்புசார்ந்த அறத்தின் வழியில் நடத்துவதுதான் இல்லறம். ஒருத்தியும் ஒருவனும் கூடிவாழும் இடம்தான் வீடு, துன்பங்களில் இருந்து விடுபட்டு ஆன்மா பேரின்பத்தில் திளைப்பதுதான் வீடுபேறு. இறந்த பின்னர் அடையும் இன்பத்தை, இருக்கும்போதே அடைவதற்கான இடமே- வீடு என்ற பெயரில் அர்த்தப்படுத்தப்படுதலுடன் நம் முன்னோரால் அழைக்கப் பட்டது. நம்முன்னோர்கள் முட்டாள்களாக வாழவில்லை. முக்காலமும் உணர்ந்தவர்களாகத்தான் வாழ்ந்துகாட்டி இருக்கின் றார்கள். துன்ப நீக்கமும் இன்ப ஆக்கமும் உள்ள இடம்தான் உண்மையான வீடாகப் போற்றப்பட்டது. அவ்வாறே போற்றப்பட வேண்டும்.

நம் முன்னோர்களின் இல்லற வாழ்வை இனிதாகக் காட்டுவது திருக்குறள். அறம் சார்ந்த வாழ்வும், அன்புசார்ந்த உறவும்தான் தமிழர் தம் குடும்பங்களின் அடித்தளம். "அறத்தான் வருவதே இன்பம்" என்று நினைத்தவன்தான் தமிழன். "அன்பின் வழியது உயிர்நிலை" என்று வாழ்ந்தவன்தான் தமிழன். அக வாழ்வின் பண்பாடும் புறவாழ்வின் நாகரிகமும் பங்கமடையாமல் பார்த்துக் கொண்டதுதான் தமிழினம்.

மனித வாழ்க்கையை நான்கு வகையாகப் பகுத்துப் பார்த்தது இந்துமதம். பிம்மசரியம், கிருஹஸ்தம், வானப்பிரஸ்தம், சந்நியாசம் என்ற நான்கு நிலைகளில் கிருஹஸ்தமே சமுதாயத்தைத் தாங்கி நிற்கும் தூணாக அமைகின்றது. இதனாற்றான் "இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும் நல்லாற்றின் நின்றதுணை" என்றார் வள்ளுவர். இதனை மேலும் சிறப்பாக "துறந்தார்க்கும் துவ்வாதவர்க்கும் இறந்தார்க்கும் இல்வாழ்வான் என்பான் துணை" என்றும் வலியுறுத்துகிறார் வள்ளுவர்.

குடும்பம் என்பது தன்னுடைய மனைவி மக்களை மட்டும் போற்றிப் பாதுகாக்கும் வீடு என்று சுயநலமாய் நம் முன்னோர்கள் வரையறை செய்து வாழவில்லை. துறவிகளுக்கும், வறியவர்க்கும், அனாதைகட்கும் பிணியாளர்களுக்கும், முதியவர்க்கும், ஊனமுற்றோர்க்கும், முடியாதவர்க்கும், முடிந்தவரை உதவியாக இருப்பதே இல்வாழ்வின் இலக்கணமாக வாழ்ந்த புண்ணிய சீலர்கள் அவர்கள். குடுபத் தலைவன் சேமிக்கும் செல்வத்தை ஐந்து பங்குகளாகப் பகுத்தார்கள். ஒரு பங்கு நாம் இந்த மண்ணிற் பிறப்பதற்குக் காரணமான மறைந்த நம் பெற்றோர்க்குப் பிதிர்க்கடன் செய்ய. இரண்டாவது பங்கு, தெய்வக் கடனாற்ற, மூன்றாவது பங்கு: நமக்கு எவ்வகையிலும் உறவில்லாத புதியவர்கள் வீடுதேடி வந்தால் அவர்களுக்கு விருந்தோம்ப நான்காவது பங்கு: நம் சுற்றத்தவரின் நலம் காக்க, ஐந்தாவது பங்கு முன்னைய நான்கு பேருக்கும் துணையாக வாழும் நமக்காக, இதுதான் வள்ளுவர் போதிக்கும் இல்வாழ்வுக்கான அறம்.

"தென்புலத்தார், தெய்வம், விருந்து ஒக்கல் தான் என்றாங்கு ஐம்புலத்தாறு ஓம்பல், தலை" என்பது அக்குறள். சேமிக்கும் செல்வம் அனைத்தும் நம் குடும்பத்திற்கே செலவழிக்கப்பட வேண்டும் என்ற எண்ணமும், ஈட்டிய பொருள் தம்புலன் நுகர்வுக்காகவே என்ற கொள்கையும் இன்றைய சமூகத்தைப் பற்றிநிற்கும் பெருநோய். தன்னல வாழ்வில் மனிதப் பிறவிக்கு எந்த மகத்துவமும் இல்லை. அன்புநெறியுள்ள மனிதன் ஒருபோதும் சுயநலமாய் வாழமுடியாது. வாழவும்கூடாது. இறைவனால் இயற்கையாகவே இது உணர்த்தப்பட்டிருப்பதை நாம் உணர்ந்துகொள்ள வேண்டும். தன்னுடைய மடிக்காம்பில் சுரக்கும் பாலை என்றும் தான் அருந்த முடியாது என்பதுதான் இயற்கையின் நியதி. பசுவின் பால் கன்றுக்கு, தாயின்பால் குழந்தைக்கு. அதேபோல் மனிதனின் வாழ்க்கையும் மற்றவர் நலனுக்கு என்பதுதான் வாழ்க்கை விதி.

திருமூலர். நல்ல ஒரு குடும்பத்தின் அடையாளமாக நான்கு செயல்களை நான்கு வரிகளில் நயமாக நமக்கு விளக்குகின்றார். ஒவ்வொரு மனிதனுக்கும் இந்தப் பாடல் வேத வாக்காக அமைய வேண்டும்.

*"யாவர்க்கும் ஆம் இறைவற்கொரு பச்சிலை*
*யாவர்க்கும் ஆம் பசுவுக்கொரு வாய்உறை*
*யாவர்க்கும் ஆம் உண்ணும்போதொரு கைப்பிடி*
*யாவர்க்கும் ஆம் பிறர்க் கின்னுரை தானே"*

பெரும்பொருட் செலவில் கனகாபிஷேகம் செய்தால்தான், இறைவன் மகிழ்வான், அருள்வான் என்று எண்ணிவிடக்கூடாது. ஒரு பச்சிலை இட்டு உள்ளன்போடு இறைவனை வழிபட்டாலே போதும். நம்மை நாடிநிற்கும் பசுவுக்கும், நாய், பூனை, காக்கைக்கும் ஒருவாய் உணவு கொடுத்தாற்போதும். அம்மா பசி என்று வாயிலில் வந்து நிற்கும் வறியவர்க்கு ஒரு கைப்பிடி உணவிட்டாற்போதும், வாய் திறந்து பிறருடன் பேசும்போது வன் சொற்களைத் தவிர்த்து இனிய வார்த்தைகளைப் பிரயோகித்து பிறர் நலம் விசாரித்தாற்போதும். இவற்றைச் செய்ய இவ்வுலகில் யாராற்றான் இயலாது. ஒவ்வொருவரும் அவ்வாறு வாழ விரும்பவேண்டும்.

வீடுகளிலே மிகச் சிறந்த வீடு ஓர் அநாதையை நல்ல முறையில் அனுசரித்து ஆதரிக்கும் வீடேயாகும். ஓர் அநாதை அழும்போது உகுக்கும் கண்ணீர் ஆண்டவன் கைகளிற்படுகிறது என்பார்கள். அநாதைகளை ஆதரிப்போர், ஏழைகளின் சிரிப்பில் இறைவனைக் காணும் பாக்கியசாலிகளாகவே இருப்பர். ஏழைக்கும் எளிய வர்க்கும் இரங்குபவனே இறைவனின் அன்பைப் பெறமுடியும். ஒருவனுடைய இல்வாழ்வில் மனைவி, மக்களிடையே அன்பும் அறம் செய்யும் குணமும் இருந்தால் அதுவே அவ்வாழ்க்கையின் சிறந்த பண்பும் நலனுமாகும். கற்புடைய மனைவியோடு இல்லின்கண் இருந்துசெய்யும் அறந்தான். இல்லறம் என்கிறார் சிலப்பதிகாரத் தின் உரையாசிரியர் அடியார்க்கு நல்லார்.

ஒரு வீட்டைப் பொறுத்தவரை பெண்ணுக்கே தலைமையைத் தந்து தமிழினம் மகிழ்ந்தது. தமிழ்மறை பெண்ணை இல்லாள் என்கிறது. இல்லாள் என்றால் இல்லத்தில் இருப்பவள் அன்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லத்தை ஆள்பவள் என்பதே அர்த்தம். ஆண்மகனை இல்லான் என்று ஒருபோதும் தமிழ்மொழி சிறப்பிக்கவில்லை. இல்லான் என்றால் ஒன்றுமே இல்லாத வறியவனே தவிர இல்லத்தை ஆள்பவன் அல்ல. பெண் வீட்டின் அரசி என்பதுதான், தமிழ் பண்பாட்டின் அசைக்கமுடியாத கருத்து அது. தமிழ்ப் பண்பாட்டின் அறுபடமுடியாத ஆணிவேர். குடும்ப வீணையின் ஆதார சுருதியாக இருப்பவள் அன்றும், இன்றும், என்றும், பெண்தான். அதனால் தான் "மனைக்கு விளக்கம் மடவாள்" என்கிறது நான்மணிக் கடிகை. "இல்லதென் இல்லவள் மாண்பானால்" என வினவுகிறது திருக்குறள். "இல்லாள் அகத்திருக்க இல்லாத தொன்றில்லை" என்ற உண்மையை உணராத தமிழர் இருக்கவே முடியாது. ஆண் மட்டுமே இருக்கும் இடத்தைக் குடும்பம் என்று யாரும் குறிப்பிடுவதில்லை. "மாண்ட மனையாளை இல்லாதான் இல். அதர் காண்டற்கரியதோர் காடு" என்கிறது நாலடியார். சிறந்த மனைவி இல்லாதான் வாழும் வீடு, வழிகாண்பதற்கரிய காடு. வாழ்க்கை அனுபவத்தில் இருந்து வெளிவந்தது. நாலடியாரின் இவ் வாக்கியம்.

"இல்லறம் அல்லது நல்லறம் இல்லை" என்று ஔவை சொன்னதன் அடிப்படை நோக்கமே பெண்ணின் பெருமையைப் போற்றுவதுதான். அடக்கம், பொறுமை, தியாகம், இரக்கம், அன்பு, பிறர்நலம், தொண்டு அனைத்தும் கலந்த கலவையே பெண். அவளுடைய தலைமையிலும் பொறுப்பிலும் இயங்குவதால்தான், இல்லறம் நல்லறமாகிறது. குடும்பம் கோவிலாவதும், குப்பை மேடாவதும், பெண்ணின் கைகளில்தான் இருக்கிறது. பாவேந்தர் பாரதிதாசன் குடும்ப விளக்கு என்று குறிப்பிட்டது பெண்ணைத் தான். ஆண் மகனுக்கு அந்த அருகதையைக் கொடுக்கவில்லை. பெண் எப்போதும் வீட்டையே சிந்திப்பாள். அவளுடைய சிந்தை அணு ஒவ்வொன்றிலும், நீக்கமற நிறைந்திருப்பது குடும்ப நலனே.

நமது புராண இதிகாசங்களிலும் காப்பியங்களிலும்கூட, இரண்டு கடமைகள் நமக்கு நினைவூட்டப்படுகின்றன. ஒன்று குடும்பக் கடமை மற்றையது சமுதாயக் கடமை. பெற்றோருக்கும், குடும்பத்தினருக்கும், குழந்தைகட்கும், சுற்றத்தார்க்கும் செய்யும் குடும்பக் கடமையை யாரும் தொண்டு என்று கொண்டாடுவ தில்லை. நெஞ்சத்தால் நேரடி தொடர்பற்றவர்க்கு உவகையுடன் செய்யும் உதவிதான் தொண்டு அதுதான் உயர்வானது.

கண்ணகியைப் பிரிந்த கோவலன், மாதவியின் மீதிருந்த மையல் மறைந்ததும், மீண்டும் கண்ணகியுடன் இணைந்தான். புதுவாழ்வுபெற அவளோடு மதுரை அடைந்தான். அடைக்கலம் தந்த இடைக்குலப்பெண் மாதரியின் வீட்டில் மனைவியிடம் மனந் திறந்து பேசினான். கண்ணகியைக் கலங்கவிட்டு விடுதலறியா விருப்புடன் மாதவியோடு மகிழ்ந்திருந்த செயலுக்காக வருந்தினான். அப்போது கண்ணகி, "மாதவியோடு நீங்கள் இருந்ததாக நான் வருந்தவில்லை. உங்களோடு சேர்ந்து இல்லறக் கடமைகளை நிறைவேற்ற முடியாமல் போனதற்காகவே நான் வருந்தினேன்" என்றாள். "அறவோர்க் களித்தலும், அந்தணர் ஓம்பலும் துறவோர்க் கெதிர்தலும் தொல்லோர் சிறப்பியின் விருந்தெதிர்கோடலும் இழந்த" அந்த நிலைகுறித்தே அவள் வருந்தினாள் என்கிறார் இளங்கோ அடிகள். ஒரு இல்லறப் பெண்ணின் இன்றியமையா வாழ்வு எது என்பதை, துன்ப நிலையிலும்கூட, மறந்துவிடாத, தமிழ் பெண்ணாகக் கண்ணகியைக் காட்டுவதன்மூலமும், எமக்கும் படிப்பினையை உயர்த்தியிருக் கின்றார் இளங்கோவடிகள்.

ஆணின் துணையின்றிப் பெண்ணும், பெண்ணின் உறவின்றி ஆணும் வாழ்வதென்பது இயற்கைக்கு முரணானது. ஒன்று மட்டும் போதும் என்றால், இரண்டு படைப்பும் எதற்கு. இரண்டின் இணைப்பில்தான் ஒன்று பிறக்கிறது. ஆண் பெண் உறவுதான், உலக இயக்கத்திற்கே அடித்தளம். கணவனுக்காக மனைவியும், மனைவிக்காகக் கணவனும் பிள்ளைகளுக்காக இருவரும் வாழ்வதே குடும்ப வாழ்வு. உண்மையான குடும்ப வாழ்வில் கடைசிவரை அன்பு குறைவதில்லை. மனம் முழுவதும் பொங்கிப் பெருகும் அன்பு குடும்ப வாழ்வில்தான் உண்டு. காதல் வாழ்வில் வாழும் குடும்பம் காலமெல்லாம் நிலைத்திருக்கும். அங்கேதான், 'நான் பேச நினைப்பதெல்லாம் நீ பேசவேண்டும். நான் காணும் உலகங்கள், நீயாக வேண்டும்'. என்ற உணர்வு எழும். சரீரத்தின் கவர்ச்சி முடிந்த பின்னரும்கூட, சாகும்வரை உள்ளத்தின் உறவு தொடரும். அவ்வாறான காதல் வாழ்க்கைக்கு அன்புதான் ஆணிவேர். அந்த அன்பு இருந்தால் இல்லத்தில் பிரிவு இல்லை. விவாகரத்து இல்லை. புறக்கணிப்புக்கோ விரக்திக்கோ இடமில்லை. பாசத்திற்குக் குறைவில்லை.

கோடிக்கணக்கில் பணம் கூடிக்களிக்கப் பங்களா. ஆடிக் களிக்க ஆயிரம் வசதிகள், வாழ்க்கைத் தரத்திற்கு வெளிச்சம் போட்டாலும், அங்கே வாழ்வில்லை. கூரையின்கீழ் இருந்து, கூழ் குடித்தாலும், 'உன் கண்ணில் நீர் வடிந்தால் என் நெஞ்சில் உதிரம் கொட்டும்'. என்று கணவனுக்காக மனைவியும், மனைவிக்காகக் கணவனும், பிள்ளைக்காகப் பெற்றோரும், பெற்றோருக்காகப் பிள்ளைகளும் உருகி நின்று அன்பு செலுத்தும் வீட்டில்தான் இல்லற வாழ்வின் நல்லறத் தவம் தவழ்கிறது.

குடும்பத்தின் தலைவனும், தலைவியும், ஒருவர்மீது ஒருவர், அன்பைப் பொழிய வேண்டும். அன்பிலே நனைந்து, அன்பிலே வாழ்ந்து, அன்பிலே ஐக்கியமாவதுதான் இனிய இல்லற வாழ்வின் இலக்கணம். இல்லறம் என்பது இன்பத்தை மறுதலிக்கும் இடமில்லை. வாழ்க்கை இன்பத்திற்காகவே வளர்த்தெடுக்கப் பட்டதுதான் குடும்பம். எல்லா உயிர்களும் இன்பத்தையே நாடுகின்றன. அந்த இன்பத்தை அடைவதற்குப் பணம் ஒரு பாதை மட்டுமே. இல்வாழ்வின் இனிமைக்குப் பணத்தைவிட, அன்புடை மனம்தான் அவசியமாகின்றது. பணம் மெத்தையை வாங்கும். தூக்கத்தை வாங்குமா? மருந்தை வாங்கும். ஆரோக்கியத்தை வாங்குமா? புத்தகத்தினை வாங்கும். அறிவை வாங்குமா? கடிகாரத்தை வாங்கும். நேரத்தை வாங்குமா? வீட்டை வாங்கும். அன்பு தவழும் குடும்பத்தை ஆக்குமா? ஆணவத்தை உண்டாக்கும். அன்பை வாங்குமா? ஆழமாகச் சிந்தியுங்கள். பணத்தால் இனிய வாழ்க்கையைத் தொலைத்துவிட்டவர்களின் வரலாறுகள் நிறைய உண்டு.

விருந்தோம்பலை, வீட்டின் தலையாய கடமையாகக் கருதிய தமிழ் மண்ணில் இன்று, வயது முதிர்ந்த பெற்றோரைப் பேணுவதே வேண்டாத வேலையாகிவிட்டதைக் காண்கிறோம். பணத்தைத் தேடி, அந்தப் பணத்தைக் கொண்டு தன் சுகத்தை நாடும் வாழ்வியல்தான் இன்றைய புதிய பொருளாதார வாழ்வின் தலைவிதியாகிவிட்டது. இது யதார்த்தமாகி வருவது வேதனைக் குரியது. பாசம் இருந்த இடத்தை அசைகள் ஆக்கிரமித்துக் கொண்டன. அன்பு நிறைந்த குடும்பத்தை பணம் பண்பாடில்லாமல்

→



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆக்கிவிட்டது. பாசத்தால் நெகிழ்ந்த நெஞ்சங்கள் பாறையாய் இறுகிப் போய்விட்டன. வெளிப் பார்வைக்கு மட்டுமே குடும்பம் இருக்கிறது. ஆனால் ஒவ்வொரு குடும்பத்திலும் குழப்பம் குடிகொண்டிருக்கின்றது. இந்நிலை மாறவேண்டும். மாற்றப்பட வேண்டும்.

விலைகொடுத்து வாங்கமுடியாத பொருட்களில்தான் விலை மதிக்கமுடியாத வாழ்க்கை அழகு இருக்கின்றது. அழிந்துபோகும் செல்வத்தையே சிலர் இறுகப் பற்றிக் கொண்டிருக்கிறார்கள். பணத்தால் வாங்க முடியாத விசயங்களும் உண்டு என்பதை இவர்கள் மறந்துவிடுகிறார்கள். வாழ்க்கை மிகவும் சிறியது, எல்லாவற்றையும், பெறமுடியாத அளவுக்கு மிகச் சிறியது. ஆகவே நீங்கள் தேர்ந்தெடுப்பது எதுவாயினும் மிகச் சிறந்ததையே தேர்ந்தெடுங்கள். அது வாழ்விலும்கூட அமையட்டும்.

இல்லற வாழ்வு, நல்லறமாக அமைய, கணவனும் மனைவியும் கற்க வேண்டிய முதற்பாடம் புரிந்துணர்வும் ஒருவர்க்கு ஒருவர் விட்டுக்கொடுத்தலும்தான். ஆண் தன்னை இழந்து பெண்ணையும், பெண் தன்னை இழந்து ஆணையும், காண்பதில் தான் குடும்ப வாழ்க்கை சிறப்படைகின்றது. வளையாததும், கடினமானதும், முறிகின்றன. மென்மையானதும் விட்டுக்கொடுப் பதும், நிலைத்து நிற்கின்றன. இல்லற வாழ்க்கையின்போதுதான், ஒரு பெண் சிற்பமாகச் செதுக்கப்படுகின்றாள். அவள் தாயாகும் போது, குடும்பக் கோவிலுக்குள் அவள் கடவுளாக மதிக்கப்படுகி றாள். துன்பத்திலும் இன்பத்தைக் காண்பதே இல்லற வாழ்வின் இனிய பண்பு. உளிகளின் வலியைப் பொறுத்துக்கொண்டால்தான், சிற்பமாக முடியும். இல்லை என்றால், காலமெல்லாம் கல்லாகத் தான் இருக்க வேண்டும்.

காலவோட்டத்தில் நாகரிகத்தின் வளர்ச்சியில், பண்பாட்டு மலர்ச்சியில், மனிதனுக்குப் பரிசாக வாய்த்ததுதான் குடும்பம். சேர்ந்து வாழ்வதில்தான் சிறப்பிருக்கிறது. விட்டுக்கொத்தாற்றான் உண்மையான மகிழ்ச்சி மலர்கிறது. புரிந்துணர்வில்தான் வாழ்க்கை ஒளிமயமாகிறது. சுயநலத்தைக் கடந்து தனக்கு மிஞ்சியதைச் சமுதாயத்துடன் பகிர்ந்துகொள்ளுங்கள். ஈதலில் இன்பம் கண்டு, இன்பத்தில் இறைவனைக் காணுங்கள். காற்று முழுவதையும் வெளிவிடாமல் தனக்குள்ளே தக்க வைத்துக்கொள்ளும் பந்து, கால்களால் உதைபடுகின்றது. ஒரு துளையால் வரும் காற்றை, மறுதுளையால் வழியனுப்பும், புல்லாங்குழலை உதடுகள் முத்தமிடுகின்றன. கொடுப்பவன்தான் எப்போதுமே பாக்கியசாலி. அவன் ஆசீர்வதிக்கப்படுகிறான். பெறுபவனல்ல. வைத்திருப்பவனு மல்ல. எனவே இனிய கானத்தை வழங்கி இதழ்களால் முத்தம் பெறும் புல்லாங்குழலாக இருங்கள்.

நம் முன்னோர்கள் முறையாக வாழ்ந்திருக்கின்றார்கள் என்பதைப் பண்டைய நூல்கள் நமக்குப் பறைசாற்றி நிற்கின்றன. வாழ்தவர்கள் வாழ்க்கை எல்லாம், வாழ்பவர்க்குப் பாடமாக அமையட்டும். நீங்கள் மறக்கப்பட வேண்டியவர்கள் அல்ல. எப்போதும் நினைக்கப்பட வேண்டியவர்கள், நேசிக்கப்பட வேண்டியவர்கள் எனும்படியாக வாழ்ந்து காட்டுங்கள். யதார்த்த உலகைச் சரியாகப் பாருங்கள் சரியாகப் பார்க்கக்கூடிய கண்கள் உங்களுக்கு இருக்குமானால், இந்த உலகம் உங்களுடையதே. நாம் அனைவரும் அன்பை விதைத்து, அன்பை அறுவடை செய்வோம். இல்லற வாழ்வை நல்லறமாக்கி இனிய வாழ்வை ஏற்று நடப்போம். "இல்லறம் என்பது நல்லறமாகும். இதுவே வள்ளுவன் சொன்ன சொல்லாகும்" . இது எம் எல்லோருக்கும் பொருத்தப்பாடு உடையதாய் அமைவதாகட்டும்.

## எங்களுக்கு எழுதப்பட்ட கடிதம் நீங்களும் வாசிக்கலாம்

அன்புடையீர், வணக்கம்,

சென்னை, திருவான்மியூரில் திரிபுரசுந்தரி அம்மை உடனாய அருள்மிகு மருந்தீசுவரர் பெருமான் திருவருள் துணைகொண்டு சைவ-ஆன்மீக மாதாந்த சஞ்சிகை "இந்து சாதனம்" பற்றிய சிறப்பு அம்சங்களை இங்கு சுருக்கமாக விளம்புகின்றேன்.

இலங்கை, யாழ்ப்பாணம் - சைவபரிபாலன சபையின் ஆதரவில் வெளியாகி வருகின்ற ஆன்மீக அறிவுசார்ந்த இந்நூலிற் பல சிறப்புக்கள் அடங்கியுள்ளன. பல்வேறு அறிஞர்களின் கருத்துக்கள் கட்டுரை வடிவில் யாவரும் படித்துப் பயனடையும் வண்ணம் வெளிவருவது இக்காலகட்டத்தில் இளம் சமுதாயத்தினர்களை நெறிப்படுத்தி வழிப்படுத்தும் என்பது திண்ணம். ஆலய வழிபாடும் அவற்றின் பயன்களும் மக்கள் வையகத்தில் வாழ்வாங்கு வாழச் செய்கின்ற எமது சமயத்தின் தொன்மையும் அதுபற்றிய சிறப்பும், பயன்பாடுகளும், வாழ்க்கைக்கு வேண்டிய முதியோர் அறிவுரைகளும் அடங்கிஇருப்பது போற்றுதற்குரியது.

இந்துசாதனம் இலங்கையில் மட்டுமின்றி இந்தியாபோன்ற ஏனைய நாட்டு மக்களும் படித்துப் பயனடைய நூல் வெளியீட்டாளர்கள் எடுத்துவரும் முயற்சி பாராட்டப்படவேண்டியதொன்றாகும். இவ்வாண்டு வைகாசி மாதச் சஞ்சிகையின் அட்டைப்படத்தினைப் பார்த்து நாமெல்லாம் பெரிதும் மகிழ்ச்சி அடைந்தோம். எமது ஆலயத்தில் வீற்றிருந்து அருள்பாலிக்கும் மருந்தீசுவரப் பெருமானுடன் அம்மை திரிபுரசுந்தரி அருட்கோலங்கள் மற்றும் கோபுரங்களுடன் தீர்த்தக்குளங்களும் மிகவும் வர்ணக் காட்சியாக மிளிர்வது எங்களைப் பெரிதும் பரவசப்படச் செய்கின்றது.

இந்துசாதனம் பத்திரிகையின் ஆசிரியராகச் செயற்பட்டுவரும் இளைப்பாறிய அதிபர் சி. சிவசரவணபவன் அவர்கள் கௌரவ சேவையையும் பெரிதும் பாராட்டி இறைவன் திருவருள் எல்லோருக்கும் கிடைக்க வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

ஸ்ரீ வெற்றிவேல் முருகன் இல்லம்,
3/191, பச்சையப்பர் 7ஆவது தெரு,
பாலவாக்கம், சென்னை - 41

அன்புள்ள
S. இராஜரெத்தினம் B.Sc.
ஓதுவாமூர்த்தி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ



திருச்சிற்றம்பலம்

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

திருச்சிற்றம்பலம்

இந்து சாதனம்
Hindu Organ
e-mail: editor@hindu organ.com

விகிர்தி ஞு ஆவணி மீ ፲ஆம் உ (17.08.2010)

# உயர் பண்பாட்டு வலயங்கள்

நமது ஆலயங்களில், கொடியேற்றத்துடன் தொடங்கி, தேர், தீர்த்தத்துடன் நிறைவுபெறும் பிரம்மோற்சவம் எனும் வருடாந்தப் பெருவிழாக்கள் நடைபெற்றுவரும் இவ்வேளையில்___

இந்தத் திருவிழாக்கள் சம்பந்தமாக ஆலயத் தர்ம கர்த்தாக்களும் உபயகாரர்களும் அச்சிட்டு வெளியிடும் அறிவித்தல்களில் ___

நாள், நேரம், விழாக்களின் ஒழுங்குபோன்ற வழமையான விபரங்களுடன் ___

ஆலயத்துக்கு வரும் அடியார்கள் சைவப் பண்பாட்டுக்கு அமைவான உடைகளையே அணிந்து வரவேண்டும் ___

விலை உயர்ந்த __ அதிக அளவிலான நகைகள் அணிந்து வருவதைத் தவிர்க்க வேண்டும் ___

ஆலயச் சூழலில் __ ஆலயத்துக்கு உள்ளேயும் திருவீதிகளிலும் எவ்விதமான தகாத நடவடிக்கைகளிலும் யாருமே ஈடுபடக்கூடாது___

போன்ற மேலதிகமான வேண்டுகோள்கள் அறிவுறுத்தல்கள் __ இடம் பெறுவதையும் சமீப காலமாக அவதானித்து வருகின்றோம்.

சமய __ சமூகத் தலைவர்கள் __ பொறுப்பு வாய்ந்த பிரமுகர்கள் போன்றோர் பொது மேடைகளில் இத்தகைய வேண்டுகோள்களை விடுவதையும் பார்க்கின்றோம்.

இவை காலத்துக்கு ஏற்றவை - அத்தியாவசியமானவை - ஆலயங்களின் புனிதத்தைப் பாதுகாப்பதை நோக்கமாகக் கொண்டவை என்பதை ஏற்றுக்கொள்ளும் நாம் ___

ஆழ்ந்து சிந்திக்கும்போது -

அவை மகிழ்ச்சிக்குரியவை அல்ல; வரவேற்புக்குரியவை அல்ல என்பதையும் ___

வருத்தத்துக்கும் கவலைக்குமே உரியவை என்பதையும் உணர்கின்றோம்.___

வேண்டுகோளை விடுபவர்கள் மேல் நாம் குற்றஞ்சாட்டவில்லை; அவர்களிடம் குறைகாணவில்லை.

அவர்களுடைய நல்லெண்ணத்திலும், அந்தரங்க சுத்தியிலும், நாம் சிறிதளவும் சந்தேகம் கொள்ளவில்லை.

இத்தகைய வேண்டுகோள் அடிக்கடியும் பகிரங்கமாகவும் விடுவிக்கப்படவேண்டிய அளவுக்கு நமது சைவத் தமிழ்ச் சமுதாயம் தாழ்த்துவிட்டதே என்பதுதான் நமது கவலை.

நமது சமயமே மெய்ச்சமயம் மிகப் பழைய சமயம் __ அகில உலகமெங்கும் ஆதியில் இருந்த ஒரேயொரு சமயம் ___

நமது சைவத் தமிழ்ப் பண்பாடே மிகச் சிறந்த பண்பாடு ___ என்றெல்லாம் அடிக்கடி பேசியும் எழுதியும் பிரசாரம் செய்தும் வரும் நாம் ___

இவற்றைப் பேணிப் பாதுகாப்பதற்கும் மேலும் வளர்த்து வளமாக்குவதற்கும் நம்மை நாமே ஆளும் நிலை. உருவாக வேண்டும் என அடிக்கடி குரலெழுப்பிவரும் நாம் -

அவற்றுக்குப் பாதகம் ஏற்படும் வகையில் அவற்றைப் பலவீனப்படுத்தும் வகையில் - அவை அழிந்தும் ஒழிந்தும் அடையாளம் அற்றும் போகும் வகையில் நடந்துகொள்ளலாமா?

போர்ச்சூழல் காரணமாக __ தங்களதும் தங்கள் பிள்ளைகளினதும் உயிர்களைக் காப்பாற்றும் ஒரே நோக்குடன் வெளிநாடுகளுக்குப் புலம்பெயர்ந்து செல்ல வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு உள்ளானவர்கள் ___

உயிர்களைக் காப்பாற்ற முடிந்த திருப்தியை அடைந்த போதிலும் __ உடலை ஓம்புவதற்கும் தேவையான - தேவைக்கும் மேலதிகமான __ பொருளாதார பலத்தை ஈட்டிவிட்ட பெருமையை அடைந்தபோதிலும் ___

உயிருக்கு உறுதி பயக்கின்ற சமய __ ஆன்மீகக் கடமைகளைச் சரிவர நிறைவேற்ற முடியாத___

சைவத் தமிழ்ப் பண்பாட்டுக்கு அமையத் தம் பிள்ளைகளை வளர்த்தெடுக்க முடியாத ___

ஆதங்கத்தில் உடல் அங்கும் உள்ளம் இங்குமாக ஊசலாடிக்கொண்டிருக்கின்றார்கள்___

ஆனால்___

நாம் பிறந்த மண்ணிலேயே - நமது சமய, பண்பாட்டுச் சூழலிலேயே தொடர்ந்தும் வாழக்கொடுத்து வைத்துள்ள நாம்...?

"ஆள் பாதி ஆடை பாதி" என்பதைத் தவறாக விளங்கிக் கொண்டவர்களைப்போல் "பாதி ஆடை"யுடன் பவனி வருகின்றோம் -நகை மாளிகை ஒன்று நகர்வதைப்போல் நடுவீதியில் நாலுபேர் மத்தியில் "நத்தை"யாகி, திருடர்களுக்கும் முடிச்சுமாறிகளுக்கும் "வெற்றிலை" வைக்கின்றோம்.

குடிப்பதற்கு__ கூத்தாடிக் கும்மாளமிடுவதற்குக் கோயில் விதிகளையே குத்தகைக்கு எடுக்கின்றோம். ___

நாணித்தலை குனியவேண்டிய இத்தகைய நடத்தைகளை ஆட்சியாளர் ஆணை இட்டால்தான் நாம் நிறுத்துவோமா?

ஆலயங்களுக்குச் செல்லும்போதாவது நாம் நாமாக இருக்கவேண்டாமா?

நமது ஆலயம் ஒவ்வொன்றையும் "உயர் பண்பாட்டு வலயமாக" நாம் மதித்தால் -

"நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்" என்ற நிலை உருவாகாதா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்து சாதனம் முதன்முதலாக இதழ் விரோதி ஆண்டு ஆவணி மாதம் 28ஆம் திகதி யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையால் வெளியிடப்பெற்றது. 1964ஆம் ஆண்டு "இந்துசாதனம்" தனது 75ஆம் அகவையை நிறைவு செய்ததையொட்டி 75ஆவது நிறைவு மலர் 1967ஆம் ஆண்டு – பிலவங் – சித்திரையிலேதான் வெளிவந்தது. திருவாளர்கள் மு. மயில்வாகனம், சி. உ. செயசேகரம், க. கணபதிப்பிள்ளை, மு. வைத்தியலிங்கம், சி. சிவரத்தினம், க.சி. நடராசன் ஆகியோர் மலர் வெளியீட்டுக் குழு உறுப்பினராய் இருந்தனர். அந்த மலரில் வெளியான ஆசிரியத் தலையங்கத்தையே மறு பிரசுரம் செய்கின்றோம்.

# என்றும் இளையாய் என வாழ்த்துவம்

திருமுருகன் பெருமைபோல் இந்துசாதனச் செந்தமிழ் நங்கையே! நீ என்றும் இளையாய் என வாழ்த்துகின்றோம். எழுபத்தைந் தாண்டு அகவையினள் இந்துசாதன நங்கை என்றாலும் தமிழகத்துக்குரிய சைவ மாநிலத்தின் தெய்வப் பணிச் செம்மையை மதித்து எழில்பெறக் காட்டுஞ் சால்புடையது. [illegible] நின்ற நிலையும் நகல் பாடுக்குரியது என்று திருஞானசம்பந்தநாயனார் திருச்செங்கோட்டுப் பதிகத்திலே சிறப்புடன் திருவாய்மலர்ந்தருளியிருக்கின்றனர்.

"கருத்தன் [illegible]
[illegible]
[illegible]
[illegible]"

பரமசிவன் உவாமம் பதியை பத்தியுடன் சிந்தை செய்கின்றவர் குலம் பிறத்தல் இன்று மேலும் எப்பொழுது இறைவனின் பெருமையைத் திருவருட்துணை கொண்டு உரைத்து மேன்மைகொள் சைவநீதி உலகெலாம் விளங்க உழைத்துவரும் இந்துசாதன மந்திரமொன்றிந்து தணிதுமென்பது போதருகின்றது.

ஆன்றோர் அமைத்த பெருமை, அருங்கலைவிநோதர் ஆறுமுகநாவலர் அவர்கள் உள்ளக்கருதித்த கருத்தில் எழுந்த பெருமை, அந்த ஐங்காங்குரவரின் வழிவந்த அன்பர்கள் இயற்றிய பெருமை என்றின்ன பலவும் தன்பொருந்திய இந்துசாதன நங்கை சுத்தச் திருவருள் வைத்துக்கின்றிப்பதையுமாறுதொன் [illegible].

அன்றே சிவமாகும் இறைநெறியைக் காட்டும் சைவசமயமே சமயம்; அது எடுத்துப் பகட்டும் முப்பொருள் உண்மையை விளக்கி என்றுமுள ஆன்மாக்கள் ஆணவத்தை நீக்கித் திருவடிகளை அடைவதற்கு வழி சிவ வழிபாடு; அவ்வழி ஒழுகுமாற்று பழிபாதகமே போக்கி நல்வினை நிற்றல் என்ற முறையிலே சைவ வாழ்க்கையும் சைவ ஒழுக்கங்களையும் வெள்ளிதோறும் தென்று தமிழ்ச் செந்நடையில் அள்ளமுதாய் வழங்கிட உள்ளம் வை இந்துசாதனப் பைங்கொடியின் நனி அணி. திருவாய் மொழியச் சீவாயமவென்று நிறைவிற் சிவானுபவப் பெருநெறியை சந்தானாசாரியர்கள் சமய குரவர்கள் எடுத்துக் காட்டியபடி வெள்ளிக்கிழமைதோறும் விளக்கும் திருத்தொண்டே இந்துசாதன மாதின் புனிதப்பணி.

நானேறோட் தீர்க்கும் முகில்வணைப்பற்றி முன்னூறுவரை கண்டீர் சொல்லி அந்நோய் யாது? அது போக்கும் விதிபோது என்று பகட்டு முத்தமிழும் வான்மறையும் ஆனான் கண்டாய் என மெய்த்திரனைத் தொழுதெழும் வழியைச் சான்றோர் உவகைனி விருந்து செருட்டி அத்தகு மொழியையும் ஆரணங்களையும் அறிதலே அறிவென்றும் உணர்த்தும் பெருமைடையாள் சாதனப் பெண்மணியது.

"நீதியால் நினைசெய்து நெக்குநெக்குருகி [illegible]
பதிகமாம் [illegible]
சேவதையும் [illegible]
ஆதியும் [illegible]"

என்று அப்பர் அடிகள் அழுத்தி வழுத்திய அருள்மொழிக் கருத்தை விளக்கிய வகையில் நீதியால் என்பது வேதசிவாகம நெறியமைனக் காட்டி உலகியலில் அரசியலின் உயர்ந்தவண்ப சைவநீதியமேயே அனைவருக்கும் [illegible] தமிழகத்தை வளர்த்து வந்திருக்கின்றனள் இந்துசாதன அன்னை.

கொண்டெடுத்து நொண்டீர் துயர் தீர்ப்பான் சிவபெருமான் அருளையினாலே சாதன நங்கை யாதும் குறைவின்றி என்றும் எப்போதும் மேதினியில் இளம் ஒளியாய் விளங்குவாள் என்பது அவளருளால் எம்முள்ளத்தெழும் நம்பிக்கையாகும்.

மறைகள் [illegible] அரைத்
[illegible]
[illegible]
[illegible]




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குப்பிளான் கற்பக விநாயகர் ஆலயம்

## சிவத்தமிழ் வித்தகர் சிவ. மகாலிங்கம்

காசிவாசி செந்திநாதையர் பிறந்த ஊர் கலையும் தமிழும் சைவமும் வளர்ந்தமண். இதுவே சிவபூமியாகிய ஈழமணித்திரு நாட்டின் யாழ்ப்பாணக் குடாநாட்டிற் செம்மண் வளமுடைய கிராமமாகிய குப்பிழான்பதி. இக்கிராமத்து மக்களின் உள்ளங் கவர்ந்த கள்வனாக, ஓங்கார வடிவினனாக இருந்து அருள் பாலிக்கும் அப்பனின் திருத்தலமே கற்பக விநாயகப்பெருமான் ஆலயம். கௌரிஅம்பாள் சமேதராகிய கேதீஸ்வரப் பெருமான் வீற்றிருந்து அருள்புரியும் மாதோட்டத்திலிருந்து நமது முன்னோர்கள் மூன்று விநாயகர் விக்கிரகங்களைக் கொண்டு வந்து ஒன்றை நீர்வேலி வாய்க்காற்றரவையிலும், மற்றையதைப் புன்னாலைக் கட்டுவன் ஆயாக் கடவையிலும், மூன்றாவதைக் குப்பிழான் கற்கரையிலும் பிரதிஷ்டை செய்ததாக வரலாற்றுச் செய்திகள் தெரிவிக்கின்றன.



அரசடிப் பிள்ளையார் என்று அழைக்கப்படும் கற்பக விநாயகப் பெருமானின் ஆலயத்தில் நடராஜர், முருகன், நாராயணர், லக்ஷ்மி, வைரவர், நவக்கிரகங்கள், சண்டேஸ்வரர், திருமுறைச் செல்வர் கோயில்கள் பரிவாரக் கோயில்களாக உள் வீதியில் அமைக்கப்பட்டுள்ளன. இராஜ கோபுரம் சித்திரத் தேர், புதிய அழகான சப்பரம், சபாமண்டபம் என்பவற்றுடன் கூடிய அருள்மிகு ஆலயமாகக் கற்பகவிநாயகர் ஆலயம் திகழ்கிறது. இக்கோயிலிலே அமைந்திருக்கும் விநாயகப்பெருமானின் எழுந்தருளி மூர்த்தம் அருளை வாரி வழங்கும் அழகுக் கோலமாகக் காணப்படுகின்றது. ஆலயத்திற்கு வருகை தருகின்ற சிவாச்சாரியர்கள், சமயப் பெரியார்கள் அனைவரும் விநாயகப் பெருமானின் எழில்மிகு எழுந்தருளி மூர்த்தத்தின் அருட் கோலத்தைப் பார்த்து வியந்து போற்றியுள்ளார்கள்.

ஆலயத்தில் நித்திய, நைமித்தியக் கிரியைகள் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. நூறாண்டு காலத்திற்கு முன்பே பெருந்திருவிழா என்ற பிரமோற்சவம் ஆரம்பிக்கப்பட்டுவிட்டது. மகோற்சவ விழாவில் ஒவ்வொரு நாளும் பல்வேறு சிறப்பு நிகழ்வுகள் இடம்பெறுகின்றன. சிவ பூசைக் காட்சி, வேதபாராயண விழா, திருமுறைவிழா, வேணுகானவிழா, கோ பூசை ஆகிய நிகழ்வுகள் நடைபெறுகின்றன. மகோற்சவ காலத்தில் அன்ன தானம் வழங்கும் வைபவம் பல அடியார்களின் ஒத்துழைப்புடன் சிறப்பாக நடைபெற்று வருகின்றது. மாகேசுரபூசை முறைப்படியாகச் செய்த பின்பே நாளாந்தம் அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்படுகின்றது.

மாதம்தோறும் வரும் வளர்பிறைச் சதுர்த்திவிழா இங்கு சிறப்பாக நடைபெற்று வருகின்றது. ஆவணிச் சதுர்த்திவிழா மிக விமரிசையாக நடைபெறும். விநாயகர் ஷஷ்டி விரத காலத்தில் இலட்சார்ச்சனை நடைபெற்று இறுதிநாள் 108 கலச அபிஷேகம் இடம்பெறும். பின்னர் கஜமுகாசுரன் போர் நடைபெறும். கந்தஷஷ்டி விரதத்தின் இறுதியிற் சூரன்போரும் இங்கு மிகச் சிறப்பாக நடைபெறுகின்றன. திருவெம்பாவைக் காலத்தில் நடராஜப் பெருமானுக்கு விஷேட பூசைகள் இடம்பெறும். ஆருத்திரா தரிசனத்தன்று (திருவாதிரை) அதிகாலை சிதம்பர தரிசனத்தை இங்குள்ள நடராஜர் சந்நிதியிற் காண்பதற்காக பக்தர்கள் பெரும் எண்ணிக்கையில் கூடுவார்கள்.

ஆலயச் சூழலில் அழகான நந்தவனம் அமைக்கப்பட்டுள்ளது. இங்கு வெள்ளெருக்கு, கடம்பு, கொன்றை, நெல்லி, பாதிரி, பன்னீர், பலாசு, திருவாத்தி, தர்ப்பை, மந்தாரை ஆகிய இறைவனின் பூசைக்குப் பயன்படும் மரங்கள் யாவும் காணப்படுகின்றன. இராஜமூர்த்தமாக மூலஸ்தானத்தில் எழுந்தருளி இருக்கும் விநாயகப்பெருமானுக்கு நாளாந்தம் கழுத்துக்கு அறுகு மாலையும், தலைக்கு வெள்ளெருக்கு மாலையும் சாத்தப்படும். மகோற்சவ காலத்தில் மாத்திரமல்லாது நாளாந்தம் அதிகாலையிலே பல பூமாலைகளையும் நிறையப் பூக்களையும் ஆலயத்திற்குக் கொண்டுவந்து அடியார்கள் கொடுத்துவிடுவார்கள்.


"என்கடன்பணி செய்துகிடப்பதே" என்ற அப்பர்பெருமானின் வாக்கிற்கமைய நமது ஆலயத்திலே நடைபெறும் செயற்பாடுகளில் பெரும்பாலானவை தொண்டாகவே செய்யப்பட்டு வருகின்றன. பல போத்தல் பால்தரும் பசுமாட்டினை மகோற்சவ காலத்திற் கோயிற் சூழலிலே கொண்டுவந்து கட்டிவிட்டு நாள்தோறும் காலை, மாலை தூய்மையான முறையில் அந்தப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலினைக் கறந்து அபிஷேகத்திற்குக் கொடுக்கும் தொண்டு இன்றும் நடைபெற்றுவருகின்றது. யாகக் கிரியைகளுக்கு வேண்டிய சமித்துக்களைக் கூட இங்கேயே பெற்றுக்கொள்ளும் மரபு இங்கு இல்லை. எல்லா இடமும் தேடி அலைந்து சீரான முறையிற் சமித்துக்களை கொண்டுவந்து பக்குவப்படுத்தி யாகக் கிரியைகளுக்குக் கொடுப்பதை இங்கே காணலாம்.

தெய்வத் தமிழாகிய திருமுறைக்கு இங்கு முக்கிய இடம் வழங்கப்பட்டு வருகின்றது. திருமுறைச் செல்வர்களுக்குக் கௌரவமளிக்கப்பட்டு மகோற்சவத்தின் ஆறாம் திருவிழா திருமுறை விழாவாகவே பல்லாண்டுகளாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது. திருமுறை விழாவிற் சுவாமி வீதிவலம் வரும்போது திருமுறை ஆசிரியர்களின் படங்கள் திருவீதி வலம் வருவதும் திருமுறை ஓதி வலம் வருவதும் முதல் திருமுறை ஆசிரியர்களையும் திருமுறை வழிபாட்டையும் போற்றுகின்றது.



திருமுறை ஓதிப் பட்டுமே வீதி வலம் செல்லும். அன்னவருடைய நாமம் தெய்வத் தமிழைப் பக்தியோடு உச்சரிக்கும் கொடிக்கவி பாடிக் கொடியேற்றுவதும், திருப்பல்லாண்டு பாடி தேர் இழுப்பதும் இங்கு பல்லாண்டு காலமாக நடைமுறையில் இருந்து வருகின்றது. தமிழிசை ஆகிய பண்ணிசையை யாழ்ப்பாணத்திலேயே அறிமுகப்படுத்திவைத்த பெருமை இசைவல்லுநர் செல்லத்துரை அவர்களுக்கே உண்டு. குப்பிளான் கிராமத்திலே பிறந்த இவருக்குக் கற்பக விநாயகரே குலதெய்வம். இவரை குப்பிளான் செல்லத்துரை என்றே பலரும் அன்போடு அழைப்பார்கள். கற்பக விநாயகர் ஆலயத்திலே இவர் பண்ணிசை வகுப்புக்களை நடாத்திப் பலர் பண்ணோடும் பக்தியோடும் தெய்வத் தமிழ்ப் பாடல்களைப் பாட வழிகாட்டினார். இவரைத் தொடர்ந்து கட்டுவனைச் சேர்ந்த ஆசிரியர் V.I.V. சுப்பிரமணியம் எங்கள் ஆலயத்தில் 15 ஆண்டுகள் பண்ணிசை வகுப்புக்களை நடாத்தி வந்தார். விழாக் காலங்களிற் சுவாமிக்குப் பின்னால் திருமுறைப் பாடல்கள், பஜனைப் பாடல்களைப் பாடும் மரபு இங்கு தொன்றுதொட்டு நிலவிவருகிறது.

இங்கு சமயப் பிரசங்கள் செய்யும் மரபு பல்லாண்டு காலமாகச் சிறப்பாக நடைபெற்று வருகிறது. நெருக்கடியான காலகட்டத்திலும் சமயப் பிரசங்க மரபைப் பேணி நடாத்திய ஒரே ஆலயமாகக் கற்பக விநாயகரின் ஆலயம் விளங்கிறது. ஈழத்தின் தலைசிறந்த மேதைகளும் அறிஞர்கள் அனைவரும் இங்கு உரையாற்றியுள்ளார்கள். திருமுருக கிருபானந்தவாரியார், குன்றக்குடி சுப்பிரமணிய சுவாமிகள் போன்ற பலரும் இங்கு உரையாற்றி உள்ளார்கள். 1984ஆம் ஆண்டில் திருமுறை மாநாடு இரண்டு நாட்கள் இந்த ஆலயத்திலேயே மிகச் சிறப்பாக நடைபெற்றது.

பெரிய புராணம், கந்தபுராணம், திருவாதவூரடிகள் புராணம் ஆகிய மூன்று புராணங்களும் வருடந்தோறும் தவறாது இங்கு படிக்கப்பட்டு வரும் சிறப்பினைக் காணலாம். கந்தசஷ்டி காலத்தில் கந்த புராணம் படிப்பது மரபு. விநாயகர் சஷ்டி விரத காலத்தில் விநாயகர் புராணம் படிக்கப்படும். தொண்டு வேறு தொழில் வேறு. ஒரு செயலைச் செய்துவிட்டு பணத்தை எதிர்பார்த்தால் அது தொழில். பலன் எதையும் எதிர்பாராமல் கடவுளுக்கு அர்ப்பணமாகப் பணியைச் செய்வதுதான் தொண்டு. எங்கள் ஆலயத்திற்கு வரும் அடியார்கள் தொண்டர்களாகவும், பக்தர்களாகவுமே காணப்படுகிறார்கள். கற்பகன் சந்நிதானத்திற்கு பலன் கருதாமற் பணிசெய்யும் தொண்டர்களை அவன் காப்பாற்றுவான் என்ற நம்பிக்கை எங்கள் கிராமத்து அடியவர்களிடம் மேலோங்கியிருக்கின்றது.

நம்பினோர்க்கு அருள் செய்யும் கற்பகன் தன்னை நாடி வந்து வணங்கும் அடியார்களின் வினைகளை வேரறுத்து இம்மையிலே எல்லா செல்வ போகங்களும் பெருவாழ்வும், மறுமையிலே சிவஞான முத்தியும் வழங்குகிறான். அடியார்களே! மேலும் தெய்வமாக நின்று பேரருள் செய்கின்ற கற்பக விநாயகனின் திருக்காட்சி கண்டு வாருங்கள். அவனுடைய திருவருளுக்குப் பாத்திரமாகுங்கள்.

(முற்றும்)

விளக்கு ஏற்றுவதற்குப் பயன்படுத்தும் எண்ணெயின் பலன்கள்

நெய்தீபம் [illegible] நல்லெண்ணெய் தீபம் [illegible]

நல்லெண்ணெய் [illegible] விளக்கெண்ணெய் [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குப்பிளான் கற்கரையில் வீற்றிருந்து அருள்பாலிக்கும் விநாயகப் பெருமான், பாடல்பெற்ற திருத்தலமான திருக்கேதீஸ்வரத்திலிருந்து வந்தவர் என்பதைத் தன்னுடைய கட்டுரையிலே சிவத்தமிழ் வித்தகர் குறிப்பிட்டுள்ளார். ஆற்றல் மிக்க ஆன்மீகச் சொற்பொழிவாளரான சைவப்புலவர் திரு. ஏ. அனுஷாந்தன் கற்கரை விநாயகப் பிள்ளைத்தமிழ் என்ற அருமையான நூலை ஆக்கியுள்ளார்; நூலிலிருந்து நான்கு கவிதைகளைத் தருகின்றோம்.

# குப்பிளான் கற்கரை விநாயகர் பிள்ளைத் தமிழ்

(1)

**காப்பு**

மயன் மாந்தாதா மாதுவஷ்டா
மண்டோதரியென் பாருடனே
கேதுப் பெயரோன் போற்றிசெயக்
கேடில் ஞான சம்பந்தர்
நேயம் மிக்க சுந்தரரும்
நீதித் தமிழ்செய் பெம்மானே
சீத நெடுநற் பாலாவிக்
கேதீச்சரநற் றலத்தோனே
ஆயுங்காலை ஆயிரத்து
ஐநூற் றிருப தாண்டளவில்
பூனைக் கண்ண ரழிகோயில்
புதையிலிருந்து வந்தநெடும்
சேயன் உந்தன் மைந்தன்சீர்
சிறக்கக் காப்பு அருள்வாயே!
ஆனை வதனன் அரசடியில்
ஆடி மகிழக் காப்பாயே!

(2)

**கௌரியம்மை காக்கவெனப் பாடிய காப்பு**

பானத் துறுநன் மொழியாளே
படவே ரிடைநன் மடவாளே
நீலமலர் கொள் கரத்தாளே
நிலவு பச்சை யுடையாளே
கான கத்துப் பெருவழிசெல்
கண்ணே போலும் பெரும்பிள்ளை
சாலக் களைத்து இருப்பானென்
றன்னே கௌரி வந்தாயோ?
ஞானக் கரும்பே நற்பதமே
நவிலும் வீரமனையாளே
வாய்க்காற் றரவை நின்றாயாக்
கடவைவந்து கற்கரையில்
மானத் தமிழர் நனிவாழ
மகிமைக் கோயில் கொண்டவுயர்
சேயை உந்தன் தலைமகனைத்
தாயே நன்கு காப்பாயே.

(3)

**செங்கீரைப் பருவத்தில்**

பச்சைக் குழவி பாலமுதம்
வேண்டியமுகை தானறிந்து
கச்சுத் தனத்தி னூடங்கே
கனத்துப் பாலைச் சொரியன்னை
உச்சிமோந்து மடியமர்த்தி
ஊக்கத்தோடு அஃதருத்த
இச்சித் ததழை மிகவசைத்துச்
சுவைத்த பின்னரொருதுள்ளு
நிச்சமாக அனைமடியில்
துள்ளிக் காட்டும் போதகமே
எச்சமாகக் கடைவாயில்
வழியும் பாலின் மணம்நாற
விச்சையாக ஒரு சொல்லை
விளக்கிக் கூறு கென்றன்னை
பச்சத்தாலே கேட்கின்றாள்
பார்த்தே யாடு செங்கீரை.

(4)

**வருகைப் பருவத்தில்**

கரங்கள் மொட்டித் துயர்தலைமேல்
கவினைப் பிடித்து மெய்யாக
நிரயம் விழினும் நின்னினைவே
நீங்க லாகா தென்பார்கள்
கரத்திலேந்து முடித்தேங்காய்
கன்மேலடித்துக் கரியில் துயர்
விட்டோம் அப்பு அரசடியில்
பிள்ளையாரே பாரென்பர்
துரத்தித் துரத்தி வாட்டுகின்ற
துயரம் வறுமை பகை நோய்கள்
விரட்டி யோட்டி வாழ்விக்க
வருவாய் எலிமே லெங்கோவே!
வரத்தி லோங்கு கஜமுகனை
வலிய கோட்டாற் பிளந்தழித்தாய்
புரத்தை நகையா லட்டவனின்
புதல்வா வருக வருகவே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கள் பெயரால் இறைவனுக்கு 'இவர்' என்ன சொல்கிறார்? 12

# பாலஸ்தாபனம்

வித்யாபூஷணம், பிரம்மஸ்ரீ ப. சிவானந்தசர்மா B.A. (Hons.)
(கோப்பாய் சிவம்)

பால என்பது இளமை என்ற பொருளையுடையது. ஸ்தாபனம் என்பது பிரதிஷ்டை. எனவே பாலஸ்தாபனம் என்ற சொல் பிரதிஷ்டை எனும் மஹாகும்பாபிஷேகத்திற்கு முன்னோடியாக நிகழ்த்தப்படும் ஓர் ஆரம்ப நிகழ்வு என்பது புலப்படுகிறது.

இப்பிரபஞ்சமெங்கும் பரந்திருக்கின்ற பேரருட்சக்தியை ஒருங்கு குவித்து அதன் ஒரு பகுதியைப் பஞ்சபூதப் படிமுறைகளினூடாக ஒரு குறித்த இடத்தில், ஒரு குறித்த உருவத்திற் சேமித்து வைத்திருந்து, அவ்வுருவத்திலிருந்து நாள்தோறும் நாம் அந்த அருட்சக்தியை எமக்கு பெற்றுக் கொள்ளும் முயற்சிதான் சிவாலயம் சார்ந்த சிவாகமக் கிரியைகளின் அடிப்படை நோக்கமாகும். அவ்வாறு சேகரிக்கப்படும் முதல் நிகழ்வு கும்பாபிஷேகம். அங்கு சேகரிக்கப்பட்ட சக்தியைக் குறைய விடாது நாள்தோறும் வளர்த்துக்கொள்ளும் நோக்கில்தான் நித்திய நைமித்தியக் கிரியைகள் செய்யப்படுகின்றன. எனவே, ஓர் ஆலயத்தில் நாளாந்தம் நாம் இறையருட் சக்தியை இறைதிருவுருவத்தில் நிறையச் செய்தல் – அங்கிருந்து நமக்குள் பெற்றுக் கொள்ளுதல் ஆகிய இரு செயற்பாடுகளும் (கொள்ளலும் கொடுத்தலும்) நிகழ்கின்றன.

இச்செயற்பாடுகளின் சமநிலை பேணப்படும்போது அங்கு சாந்நித்தியம் குறைவுபட இடமில்லை. எனினும் ஆலயத்தின் கட்டடங்களில் ஏற்படக்கூடிய சிதைவுகள், சூழலில் ஏற்படக்கூடிய குறைபாடுகள், நமது நாளாந்தக் கிரியைகளில் ஏற்படக்கூடிய தவறுகள் இவற்றால் அங்குள்ள சாந்நித்தியம் குறைவுபடக்கூடும். இதனால் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை மஹாகும்பாபிஷேகம் நடத்தப்படவேண்டும். என்பது ஆகமவிதி. அவ்வாறு கும்பாபிஷேகம் நிகழ்த்துவதற்கு முதற்படியாகப் பாலஸ்தாபனம் செய்யப்பட வேண்டும்.

அதுமட்டுமல்லாமல், புதிய ஒரு ஆலயத்தில் முதலாவதாகக் கும்பாபிஷேகம் நிகழ்த்தும்போதுகூட பாலாலயம் அமைத்துப் பாலலிங்கம் ஒன்றை அங்கு ஸ்தாபித்து பாலஸ்தாபனம் செய்து பூஜை வழிபாடுகள் நிகழ்த்திய பின்னரே கும்பாபிஷேகம் செய்யவேண்டுமென்பது விதி. பாலாலயம் என்பது கும்பாபிஷேகத்தின் முன்னர் திருவுருவங்களை ஸ்தாபித்து வழிபாடுகள் செய்யும் சிறிய ஒரு மண்டபம். இதனை இளங்கோவில் எனவும் சொல்வர். இங்கு இறைசக்தியைச் சேமித்து வைத்திருப்பதற்காகப் பிரதிஷ்டை செய்யப்படும் தற்காலிக உருவத்தையே பாலலிங்கம் என்பர். எனவே, கும்பாபிஷேகத்திற்கு முன்னோடியாகப் பாலாலயம் ஒன்றை அமைத்து, அதில் பாலலிங்கம் ஒன்றை ஸ்தாபித்து, அந்த உருவத்தில் இறையருட் சாந்நித்தியத்தை ஏற்படுத்துவதே பாலஸ்தாபனமாகும். இதனை பாலஸ் தாபன கும்பாபிஷேகம் என்றே கூறுவர்.

இன்னும் ஒரு வகையில் நாம் இதனைப் பார்க்கலாம். கும்பாபிஷேகம் நிகழ்ந்து பன்னிரண்டு ஆண்டுகட்கு மேற்பட்ட ஓர் ஆலயத்திற் புனருத்தாரண வேலைகளைச் செய்து மறுபடி கும்பாபிஷேகம் செய்வதற்காக, அந்த ஆலயத்தின் கருவறையிலுள்ள திருவுருவில் நாம் சேமித்து வைத்திருக்கும் சக்தியை இன்னோர் இடத்தில் (பாலாலயத்தில்) தற்காலிகமாக எடுத்து வைக்கும் கிரியைதான் பாலஸ்தாபனமாகும்.

பாலஸ்தாபன கும்பாபிஷேகம் என்று முன்னர் நாம் குறிப்பிட்ட சொற்பிரயோகத்திற்கு ஏற்ப, ஏறக்குறைய ஒரு கும்பாபிஷேகத்தில் நிகழ்கின்ற கிரியைகள் யாவும் பாலஸ்தாபனமொன்றில் இடம்பெறுகின்றது. அனுஜ்ஞை, வாஸ்துசாந்தி, மிருத்சங்கிரகணம், அங்குரார்ப்பணம்... என்று நீண்டுசெல்கின்ற அந்தக் கிரியைகளின் விபரங்களின் விபரங்களைக் கும்பாபிஷேகம் என்னும் அடுத்த கட்டுரையில் நாம் விரிவாகப் பார்க்கலாம். அதற்குமுன் பாலஸ்தாபனத்தில் இடம்பெறும் சிறப்பான கிரியைகளை மட்டும் இங்கே பார்ப்போம்.

முதலிற் பாலாலயம் அமைக்கப்படுகின்றது. தற்காலிகமான ஒரு கொட்டகையே பாலாலயம். கருவறை அமைந்திருக்கும் இடத்திற்கு ஈசான திக்கிலேயே பெரும்பாலும் பாலாலயத்தை அமைப்பர். மஹாமண்டபத்தில் அல்லது ஸ்நபன மண்டபத்தில் அல்லது ஸ்தம்ப மண்டபத்தில் கருவறைக்கு நேர்கிழக்காக இல்லாமல் சற்று வடக்குத் திசையிற் பாலாலயத்தை அமைப்பர். சில வேளைகளில் திருப்பணி வேலைகளின் வசதி கருதி உள்வீதியில் ஈசான திசையில் அமைப்பதும் உண்டு.

நித்திய பூஜைகள் சரியாக நடத்தக்கூடிய முறையில் இது அமைக்கப்படும். ஆலயக் கருவறையில் இருக்கும் பிரதான மூர்த்தி இங்கும் பிரதானமாக நடுவில் இருக்க, ஏனைய பரிவார மூர்த்திகளின் திருவுருவங்கள் யாவும் அங்கே இருந்த அதே திசைகளில் அமையுமாறு ஒரே மண்டபத்தினுள் மிக நெருக்கமாக ஸ்தாபிக்கப்பெறும். அதாவது மிகப்பெரிய கட்டடங்கள் கட்டப்படமுன்னர் அவற்றின் மாதிரி வடிவங்களை ('மொடல்') ஒரு பொம்மைபோல் உருவாக்கி வைத்திருப்பார்களே, அதேபோன்ற ஓர் அமைப்பை நாம் இங்கே நோக்கலாம்.

ஆலயக் கருவறையிலும், பரிவார சந்நிதானங்களிலும் மூர்த்திகளைத் தாங்கிநிற்கும் பீடங்கள் கருங்கல்லினால் அமைந்திருக்கும். இங்கே, பாலாலயத்திலோ தற்காலிக ஏற்பாடு என்பதாற் கருங்கற் பீடங்கள் அவசியமில்லை. சீமெந்தினாற் பீடம் அமைப்பர். (முற்காலத்திற் சாதாரண கற்கள், மரப்பீடங்கள், மண்மேடைகள் முதலியவற்றைப் பயன்படுத்தியிருப்பர்) கும்பாபிஷேகத்தில், பீடத்தையும் திருவுருவத்தையும் இணைப்பதற்கு எட்டு மூலிகைகளின் சேர்க்கையால் உருவான அஷ்டபந்தன மருந்தைப் பயன்படுத்துவர். ஆனால், இங்கு பாலாலயத்திற் சீமெந்து, சர்க்கரை, வாழைப்பழம் என்ற மூன்றும் சேர்ந்த 'திரிபந்தனம்' என்ற கலவையைப் பயன்படுத்துவர்.

உரிய இடத்தில் முறைப்படி பாலாலயம் அமைத்ததும் நல்ல மூகூர்த்தம் ஒன்றிலே பாலஸ்தாபனக் கிரியைகள் நடைபெறும். இந்த முகூர்த்தம் நிர்ணயிப்பதில் முக்கியமான ஒரு விடயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவனிக்கப்படுகின்றது. பாலஸ்தான முகூர்த்தம் 'சரலக்கின'மாக இருக்கவேண்டும். இதை எவ்வாறு கண்டறிவது?

மேடம் முதல் மீனம் வரை பன்னிரண்டு இராசிகள்இராசிச் சக்கரத்திலே உள்ளன. ஒரு குறித்த நேரத்தில் இவற்றில் எந்த இராசியிற் சூரியன் நிற்கின்றாரோ அந்த இராசியே அந்த நேரத்திற்குரிய லக்கினம் எனப்படும். லக்கினமே முகூர்த்த வேளையில் மிக முக்கியமானதாகும்.

முதலாவது மேடம் சர இராசி. இரண்டாவது இடபம் ஸ்திர இராசி. மூன்றாவது மிதுனம் உபய இராசி, இவ்வாறே அடுத்தமூன்று இராசிகளும் சரம், ஸ்திரம், உபயம் என மாறி மாறி வரும். சரம் என்பது நிலையற்றது. அசைவுக்குரியது. ஸ்திரம் என்பது நிலையானது – அசைவற்றது. உபயம் என்றால் இரண்டு என்று பொருள். எனவே, உபய இராசி இரண்டும் கலந்த தன்மையை உடையது. பிரதிஷ்டை என்பதன் பொருள் நன்கு நிலை நிறுத்தல். நீண்ட காலம் கருவறையில் வீற்றிருந்து அருள் செய்ய வேண்டும் என இறையருளைப் பிரதிஷ்டை செய்யும் மஹாகும்பாபிஷேகம் நிகழும் முகூர்த்தம் நிலையான லக்னமாக, ஸ்திர ராசியாக இருக்க வேண்டும். மாறாக, தற்காலிகமாகப் பிரதிஷ்டை செய்யும் பாலஸ்தாபன முகூர்த்தமானது அசைவுடைய லக்கினமாக, சராசரியாக அமையவேண்டும். மத்திம பட்சமாக உபயராசி இரண்டிற்கும் கொள்ளப்படுவதுண்டு.

குறிப்பிட்ட அந்த முகூர்த்தத்தில் நிகழும் பாலஸ்தாபனக் கிரியைக்கு முன்னோடியாகப் பல பூர்வாங்கக் கிரியைகள் இடம்பெறும். பாலஸ்தாபனத்திற்கு முதல்நாள் அல்லது அதற்கும் முதல் ஒரு நல்ல நாளிலே விநாயகர் வழிபாடு, புண்ணியாக வாசனம், பஞ்சகவ்விய பூஜை முதலியவற்றோடு பூர்வாங்கக் கிரியைகள் ஆரம்பமாகும். பிராமணோத்தமர்களிடமும் இறைவனிடமும் அனுமதி பெறுகின்ற 'அனுஜ்ஞை' நடைபெறும். விநாயகரை மகிழ்விக்கக் கணபதிஹோமம், நவக்கிரகங்களை மகிழ்விக்க நவக்கிரகஹோமம் என்பன இடம்பெறும். சூழலைப் புனிதப்படுத்தும் வாஸ்து சாந்தி நடைபெறும். யாகத்தின் அங்கங்களாகிய மிருத்சங்கிரகணம் (மண் எடுத்தல்), அங்குரார்ப்பணம் (முளைப்பாலிகை இடுதல்), ரட்சாபந்தனம் (காப்புக் கட்டுதல்) என்பன அடுத்து நிகழும் கிரியைகளாகும்.

மூலாலயத்திலே இருக்கின்ற இறைசக்தியைப் பாலாலயத்தில் எழுந்தருளச் செய்தலே நமது முக்கிய நோக்கம். இதற்காகக் கும்பம் தேவை. அதனை மந்திர சகிதமாக முறைப்படி உருவாக்குதல் 'கடஸ்தாபனம்' அல்லது பிரதான கும்பஸ்தாபனம் என்பர். கும்பத்திற்குரிய குடத்தைக் கழுவி எடுத்து நூல்சுற்றித் தூபமிட்டு நீர் நிரப்பி, அதிற் சேர்க்கவேண்டிய பொருட்களைச் சேர்த்து; மாவிலை, தேங்காய், பட்டு, கூர்ச்சம் இவற்றைச் சேர்க்கின்ற ஒவ்வொரு செயற்பாட்டையும் ஒவ்வொரு மந்திரங் களுடன் நிதானமாகச் செய்தபின் அக்கும்பத்தை மூலஸ்தானத்தி லுள்ள திருவுருவின்முன் வைத்து 'கலாகர்ஷணம்' (கலா–ஆகர்ஷணம்) என்ற கிரியை செய்யப்படும். திருவருட்சக்தி எனும் கலைகளைத் திருவுருவத்திலிருந்து ஆகர்ஷித்துக் கும்பத்திலே சேர்த்தலே இக்கிரியையாகும். அதன் பொருளை நாம் இங்கு பார்க்கலாம். மாபெரும் இறைசக்தியைப் பல பாகங்களாகப் பகுத்துத் தனித் தனியாக அங்கிருந்து இங்கே ஆவாஹனம் செய்தபின் ஒரு அருமையான விண்ணப்பம் சொல்லப்படுகின்றது.

"தேவ தேவ ஜகந்நாத ஜகத் காரண..."

எங்கும் நிறைந்து எல்லாவற்றையும் ஆளுமை ஈசனாகிய தேவனே, உலகின் காரணமாகவும் காவலனாகவும் விளங்கு பவனே, அடியேன் மந்திர தந்திரங்களையும் சாஸ்திரங் களையும் அவற்றின் பொருள்களையும் அறியேன். ஆகமங்களையும் அவற்றில் சொல்லப்படும் உனது உருவ விளக்கங்களையும் அறியேன். உனது விக்கிரகத்தையும் பீடத்தையும் பொருத்தி இப் பிரதிஷ்டையைச் செய்வதற்காகக் கருணையோடு நீ இந்தத் திருவுருவத்திலிருந்து கும்பத்திலே எழுந்தருளுவாயாக. எல்லா ஆவரணதேவர்களுடனும் எல்லாச் சக்திகளுடனும், எல்லா ஐஸ்வர்யங்களுடனும் நீ இந்தக் கலசத்தில் எழுந்தருளவேண்டும். வேதங்களை நன்குணர்ந்த சனகர் முதலிய முனிவர்கள்கூட உனது ஸ்வரூபத்தை அறியாத நிலையில் நான் எவ்வாறு அறிவேன்? வேதங்கள் தாமும் உனது முழுமையான ரூபத்தைக் கூற வில்லையே. வெறுமனே வயிற்றை நிரப்பும் அடியேன் எவ்வாறு அறிவேன். ஐயனே? அதனால், கருணையோடு இக் கும்பத்தில் நீ எழுந்தருளுவாயாக.

இவ்வாறு எல்லாப் பரிவார சந்நிதிகளிலுமுள்ள இறை திருவுருவங்களிலுமுள்ள சக்திகள் ஒவ்வொரு கும்பங்களில் சேகரிக்கப்பட்டபின் அக்கும்பங்களெல்லாம் அந்தந்த மூர்த்திகளுக் குரிய யாகங்களில் வைக்கப்படும். இப்போது ஆலயத்தின் மூலமூர்த்தி மற்றும் பரிவார மூர்த்திகள் எல்லாம் கும்பங்களிலே எழுந்தருளி யாகசாலைகளில் வீற்றிருக்கும் நிலையில் நாம் காணமுடியும். யாகசாலைகளில் விசேட பூஜைகள், ஹோமங்கள் நிகழும். அதன்மூலம் கும்பத்தில் உள்ள இறைசக்தி சிதைவுறாமற் பாதுகாக்கப்படும்.

இந்த இடைவெளியில் 'பேரசலனம்' என்ற கிரியைமூலம் திருவுருவங்கள் தாம் பிரதிஷ்டை செய்யப்பட்ட இடங்களிலிந்து மெதுவாக ஒரு இடபத்தின் துணையோடு பெயர்த்து எடுக்கப்படுகின்றன. அவை மறுபடி ஒரு நல்ல மூகூர்த்தத்திற் புதிதாகக் கட்டப்பட்ட பாலாலயத்தில் தத்தமக்குரிய இடங்களில் வைக்கப்பட்டு முன்னர் கூறியபடி திரிபந்தனம்மூலம் ஸ்தாபிக்கப் படுகின்றன.

இதன்பின் எண்ணெய்க் காப்பு, பிம்பசுத்தி முதலிய கிரியைகள் நடைபெறுகின்றன. பின் ஸ்பர்சாகுதி என்னும் முக்கிய கிரியைமூலம் யாகத்திலிருக்கும் சக்தி பாலாலயத்தி லிருக்கும் திருவுருவத்தில் சேர்க்கப்படுகின்றது. அதன்பின் குறித்த சுபமுகூர்த்தத்தில் கும்பம் திருவுருவத்தில் அபிஷேகம் செய்யப் படுகின்றது.

இங்கு ஒரு முக்கியமான விடயம் குறிப்பிட வேண்டும். புராதனப் பெருமை மிக்க பல ஆலயங்களில் மூலாலயத்திலிருந்து திருவுருவங்கள் பெயர்க்கப்படுவதில்லை. அங்கிருந்து திருவருட்சக்தி மாத்திரம் கும்பத்திலே எடுக்கப்பட்டு யாகத்தில் வைத்துக் கிரியைகள் செய்யப்பட்டபின் பாலாலயத்தில் இதற்காகப் புதிதாக நிறுவப்பட்ட பாலலிங்கம் அல்லது பால மூர்த்திகளில் அபிஷேகம் செய்யப்படுவதன்மூலம் அங்கே சேர்க்கப்படுகின்றது.

மூலாலயத்தில் இருக்கும் திருவுருவில் இருந்து சக்தி பாலாலயத்தில் சேர்க்கப்பட்டாலும்கூட தினமும் இந்த மூலஸ் தானத் திருவுருவுக்கும் மறைமுகமாக ஒரு பூஜை நடைபெற வேண்டும் எனச் சொல்லப்பட்டுள்ளது. இதனைக் குப்த பூஜை என்பர்.

இதன்பின் விசேட பூஜை வழிபாடுகளுடன் பாலஸ்தாபனக் கிரியை நிறைவுபெறுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமயம் ஒரு வாழ்வியல் - 20

கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்

வாழ்க்கை இருவகையானது. சிலர் வாழ்க்கையைத் திட்டமிட்டு வாழ்கின்றனர். வேறுசிலர் எப்படியும் வாழலாம் என்ற மனநிலையிலே வாழ்க்கை நடத்துகின்றனர். வாழ்க்கை என்றால் என்ன? இது குறித்த விளக்கம் பலருக்கு இன்னும் தெரியவில்லை. தனி மனித வாழ்வு, பொதுவாழ்வு எனவும் வாழ்வு இரண்டாகப் பகுத்து நோக்கப்படுகின்றது. தனிவாழ்வு தனிமனிதன் தொடர்பானது. பொதுவாழ்வு பலரோடு தொடர்பானது. தனிமனித வாழ்வு சுயநலம் கொண்டது பொதுவாழ்வு பொதுநலம் கொண்டது.

எமது சமயம் பொது வாழ்வு பற்றிய கருத்தினை மக்களின் மனதிலே பதிய வைக்கப் பல நடைமுறைகளை ஏற்படுத்தியுள்ளது. அந்த வகையில் மக்களின் நடை உடை பாவனைகளில் சில ஒழுங்குகளையும் வரையறை செய்துள்ளது. கோயில் மக்கள் கூடுகின்ற பொது இடமாக அமைந்தது. பல்வேறு இடங்களிலிருந்து வருகின்ற வேறுபட்ட வாழ்க்கை நடைமுறைகளைக் கொண்டவர்கள் ஒருங்கிணையும்போது ஒரு பொதுவான வழிபாட்டு நடைமுறையை நம்முன்னோர் கடைப்பிடித்தனர். அதற் கமைவாகவும் எழுப்பப்பட்டது. இந்நடைமுறையின் முதலாவது விருந்து தன்மை வேறுபட்டிருந்தாலும் ஆடை பொது கருத்திலும் மக்கள் எல்லா ஆடையை அணிவதையே விரும்புகின்றனர். எமது சமய மரபான ஆடையிலும், வயது நிலைக்கேற்ற வேறுபட்ட ஆடைகள் வழக்கிலிருந்துள்ளன. பாவாடை சட்டை, பாவாடைதாவணி, சேலை என மூன்று வகையான ஆடைகள் குழந்தை, குமரி, தாய் என்ற படிமுறை வளர்ச்சியைச் சுட்டும் ஆடைகளாகப் பயன்பட்டன.

தற்போது வயது நிலைக்கேற்ற வளர்ச்சிபற்றிய கருத்துக்கள் ஆய்வு செய்யப்பட்டுப் பல சட்டங்கள் இயற்றப் பட்டுள்ளன. ஆனால் அவற்றால் முரண்பாடுகள் தீரவில்லை. மாறுபட்ட வயதுநிலைக்கேற்ற உடல்வளர்ச்சி, உளவளர்ச்சி என்பவற்றைக் கருத்திற் கொண்டு மரபான ஆடை அணியும் வழக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. வழிபாட்டுத் தலங்களிற் பலரோடு கூடும்போது ஆடையால் எழிலை பேணப்படவேண்டியது இன்றியமையாதது. குறிப்பாக இளைஞர்களிடையே அணியும் ஆடை [illegible] வேண்டும்.

எமது சேவைக்கெனத் திரளும் பக்திக் கூட்டத்துக்குச் சமூகத்தாரின் ஒழுங்கு பேணப் பழக்கப்படுத்துக்கொள்வதும், அதே வேளையில் அந்தப் பக்தி கூறுகளை பேணுவதும் வளர்த்து வலுப்படுத்துவதும் பக்தர்களின் கடமையாகும். தம் செல்வச் சிறப்பையும் செருக்கையும் பிறர்க்குக் காட்டும் வகையில் கண்ணைக் கவரும் பகட்டான ஆடைகளை "அலங்கார"மாக அணிந்து செல்வதைத் தவிர்க்கவேண்டும். அவை பண்பாட்டுக்கு இசைவானவையல்ல. எளிய, அடக்கமான ஆடைகளை அணிந்து செல்ல வேண்டும் என்பதை வலியுறுத்துகின்றார் கட்டுரையாளர்.

கடைப்பிடிக்காது தமது மரபான ஆடை அணிந்து செல்லும் வழக்கம் நீண்ட காலமாக இருந்தது.

யாழ்ப்பாணத்தில் கிறிஸ்தவ சமயம் பரவியபோது மேலைத்தேய ஆடை அலங்காரமும் நடைமுறை வாழ்வியலில் இணைந்து கொண்டது. குறிப்பாக ஆண்களின் ஆடையில் மாற்றம் ஏற்பட்டது. வெப்பமான காலநிலைக்கு ஏற்ற பருத்தி ஆடை வழக்கிலிருந்தது. 'வேட்டி' என்ற ஆண்களின் பருத்தியாலான நாகரிகமற்ற ஆடையாகக் கருதப்பட்டது. சமய நிறுவனங்களும் காலநிலைக்கு ஏற்ற ஆடையைப் பற்றிய கருத்தைக் கைவிட்டு விட்டன. எமது நாட்டின் வழிபாட்டு நடைமுறைகள் தொடக்கத்தில் தூய்மையையும் வலியுறுத்துவனவாக இருந்தன. கந்தையானாலும் கசக்கிக் கட்டும் பண்பாடு பேணப்பட்டது. ஆனால் மேலைத்தேய ஆடையான காற்சட்டை நடைமுறைக்கு வந்தபோது ஆலயத்தின் தூய்மை கருத்திற்கொள்ளப்படவில்லை. இத்தகைய ஆடை மாற்றம் தலங்களுக்குச் செல்லும்போது பிற இனத்தவரின் மரபான ஆடைகளை விருப்போடு அணிந்துசெல்லும் நடைமுறை பின் வேகமாகப் பரவிவிட்டது. குறிப்பாக முஸ்லிம் இனத்தவரின் மரபான ஆடையையே அணிந்துசெல்லும்முறையைத் தோன்றியுள்ளது. இந்த ஆடை மாற்றம் பொது வாழ்வு நிலையைச் சிக்கலுக் குள்ளாக்கியுள்ளது. மரபான தமிழ் சைவமரபு ஆடை எது என்று

ஆடை அணியும்போது ஒருவருடைய எண்ணம் பெரும்பான்மையும் அழகையும் கவர்ச்சியையுமே அவாவிநிற்கும். ஆனால் அவர் போகின்ற இடத்தைப் பற்றிய எண்ணமும் ஏற்படவேண்டும். இதுபற்றிய எண்ணத்தைச் சிறுவயதிலேயே ஊட்டவேண்டும். சிறுவர், பண்பாட்டு ஆடை என்ற வேறுபாடு குழந்தைப் பருவத்திலே ஏற்படுவதற்குப் பாடசாலையும் கோயிலும் பயிற்சிக் களங்களாக உள்ளன. மேலும் இதுபற்றிச் சமய நிறுவனங்களும் ஆற்றுப்படுத்த வேண்டும்.

இன்றைய காலகட்டத்தில் பல சிறார் பெற்றோரையும் வாழ்க்கைத் துணையையும் இழந்து சிறுவர் இல்லங்களில் அடைக்கலம் பெற்றுள்ளனர். அவர்களைப் பொறுப்பேற்ற தொண்டர்கள் அச்சிறுவரை நெறிப்படுத்தவும் கடமைப்பட்டவராவர். இல்லங்களிலே வாழும் சிறார்க்குச் சமய உணர்வே மனப் பக்குவத்தை நல்கும். பொதுவாழ்வுபற்றிய சிந்தனை ஏற்படுவதற்கு இல்லச் சூழல் வாய்ப்பாக அமைய வேண்டும். ஆடையும் அணியும் சமயம் பற்றிய நம்பிக்கையை ஊட்ட வேண்டும். வேறுபாடற்ற மரபான ஆடை அணியும்போது சிறார் மனதில் ஓர் இணைப்பாக்கம் தோன்றும். அதுவே எல்லோரும் சமம் என்ற உணர்வைத் தரும். தூய்மையான மரபான ஆடையும் விபூதியும் சைவசமயத்தவர் என்ற தன்னுணர்வையும், சைவ வாழ்வியலையும் எடுத்துரைக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருமிக்குப் பொற்கிழி கொடுத்த கதை சைவத் தமிழ் அடியார்கள், இலக்கிய காரர்கள் எல்லோரும் நன்கறிந்து ஒன்று "நெற்றிக் கண்ணைக் காட்டினாலும் குற் றம் குற்றமே" எனச் சொன்ன நக்கீரனின் துணிச்சலைப் பாராட்டுவோர் பலர். குற்றம் செய்தவன் இறைவனா? நெற்றிக் கண்ணைக் கண்ட பின்னரும் இறைவனே குற்றம் செய்தவன் என அடம்பிடித்த நக்கீரனா? கம்பன் புகழ்பாடிக் கன்னித் தமிழ்வளர்ப் பதுடன் தமிழில் நிறைந்துள்ள ஆன்மீகக் கருத்துக்களுக்கு அருமையான விளக்கங்க களை அளித்தும் வரும் கம்பவாரிதியின் தீர்ப்பு என்ன? உரைநடைக்கும் பாவுக்கும் இடைப்பட்ட "உரையிடைப் பா" நடையில் "கம்பவாரிதி" எழுதும் இந்தத் தொடர் சுவை யும் பயனும் மிக்கது.

தொடர்

# குற்றம் குற்றமே!

கம்பவாரிதி இ. ஜெயராஜ்

உலகை மன்மதன் தன்வயப்படுத்தும்,
இளவேனிற் காலத்தின் ஓர் மாலைப் பொழுது,
வசந்தத்தின் இனிமை துய்க்க,
செண்பகப்பாண்டியன் அரசமாதேவியோடு புறப்படுகிறான்.
ஈசன் எந்தை இணையடி நீழலாய்,
இயற்கையின் எழிலோடு செயற்கையின் வனப்பும் கூடிய,
மனம் பதித்தார்க்கு மாறா இதம் தரும்,
ஓர் அற்புதக் காவினை அடைகிறான்.
நலம் மிகும் காவின் நயப்பினிற் திளைத்து,
ஏகாந்தத்தின் இனிமை உணர்ந்து
இளவேனில் இன்பம் துய்க்கிறான்.
வசந்தம் வருட நாணித் தலைசாய்த்து மலர்ந்து நிற்கும்,
பூக்களின் நடுவில் தானும் ஓர் பூவாய்,
தன்மனங்கவர் காதலி பூரித்து ஓர் ஓரத்தில் நிற்க,
சற்றுத் தள்ளி,
தனித்தவனாய்,
ஓர் அற்புதச் சிற்பியின் கைப்பதத்தால் கவினுற்ற கற்குன்றொன்றில்,
மெய்மறந்து மேனிசிலிர்க்க அமர்ந்திருக்கிறான்.

**இவ்விள வேனிற் காலத்(து) இன்னுயிர்த் துணைவியோடும்**
**செவ்விய செங்கோல் நேமிச் செய்பக மாறன் ஓர்நாள்**
**கைவினை வல்லோன் செய்த கதிர்விடு காந்தக் குன்றில்**
**வெவ்விய வேடைநீப்பான் இருந்தனன் வேறு வைகி**

அப்போது
எப்போதும் அவன் நாசியறியா நாற்றம் ஒன்றை,
முதன்முதலாய் அவன் மூக்குணர்ந்தது.
அவ்வாசனையில் எளியரானார்தம் மனம் போல்,
வனப்புமிகு வனத்தின் பூக்களிலெல்லாம் புகுந்து வருடி,
அவற்றின் நாற்றம் பொருந்தி நளினமாய் வீசும்,
காற்றின் மணமோ இது? காவலன் நெஞ்சிற் கேள்வி.
ஆண்டு தோறும் இவ்வரிய வசந்தத்தை,
தீண்டி இன்பில் திளைப்பவன் ஆதலால்,
பூக்களின் மணத்தை அவன் புலன்கள் நன்கறியும்.
இப்போது வந்த இனிய நறுமணம்,
எப்போதும் காணா ஒன்றென இதயம் சொல்ல,
இந்த வாசனை எங்கிருந்துற்றது?
வந்தது காவில் காற்று வெளவிய வாசமன்று.
காற்றுக்கும் வாசம் இல்லை.
அங்ஙனமாயின்?
கேள்வி பெரிதாயிற்று.

**வெவ்விய வேலான் வீசும் வாசமோந் (து) ஈது வேறு**
**திவ்விய வாசமாக இருந்தது தென்றால் காவில்**
**வெளவிய வாசமன்று காலுக்கும் வாசமில்லை**
**எவ்வியல் வாச மேயோ இதுவென எண்ணங் கொள்வான்**

அயலையாராய்கின்றன அவன் கண்கள்.
சற்றுத் தூரத்தே தன்னைமறந்து நிற்கும் தலைவியைக் காண்கிறான்.
அவனை வாவெனக் கைநீட்டியழைப்பது போல்,
வசந்தக்காற்றில், அவள் கூந்தல் குதூகலிக்கிறது.
அவன் மனத்துள் திடீரென ஓர் ஒளி,
காற்று இவ்வாசத்தை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவியின் கூந்தலில் இருந்தே திருடியது என நிச்சயம் கொள்கிறான்.
அவன் உள்ளம் இறும்பூ தெய்துகிறது.
வண்டும் உணரா அவ்வாசனையை,
கண்டுணர்ந்ததாற் களிகொண்டான் பாண்டியன்.
மீண்டும் அவன் மனத்திலோர் ஐயம்.
தேவி கூந்தலின் இத்தித்திக்கும் வாசனை,
பூவினால் சேர்ந்ததோ?
புதுமணத் தாதுகள் கூடிவந்ததோ?
குளித்தபின் சேடியர் கூட்டும் அகிற்புகை கொண்டதால் வந்ததோ? என
பலபல எண்ணிப் பாண்டியன் மயங்கினான்.
காதற்கினியவள் கருங்குழற்கற்றையின்,
ஏதமில் வாசனை இயற்கையா ? செயற்கையா ?
இவ்வெண்ணம் மீண்டும் அவன் அறிவை ஆராயத் தூண்டிற்று.

**திரும்பித்தன் தேவி தன்னை நோக்கினான் தேவி ஐம்பால்**
**இரும்பித்தை வாசமாகி இருந்தது கண்டிவ் வாசஞ்**
**சுரும்பிற்கும் தெரியா தென்னாச் சூழ்ந்(து) இறும் பூது கொண்டீ**
**தரும்பித்தைக் (கு) இயல்போ செய்கையோ என ஐயங் கொண்டான்**

அவன் மனத்துள் மறுபடியும் திடீரென ஒரு மகிழ்ச்சி.
தன் அவையிலுள்ள,
சங்கச் சான்றோரின் தங்கத் தமிழுக்கு,
இவ்வினாவை விதையாக்கினால் என்ன ?
ஆகா என அவன் ஆனந்தித்தான்.
தன் மனத்திற் தோன்றிய இக் கேள்வியை,
எவர்க்கும் உரைக்காமல்,
தன் ஐயுறு கருத்தை யாவராயினும்,
அறிந்து கவி தருக என ஆணையிட்டால்,
உளக்கருத்தறியும் உண்மைப்புலவனைத் தெரிந்தறிந்திடலாம்.
தேடற்கரியவோர் கவியறிந்திடலாம்.
ஒரே கல்லில் இரு மாங்காய் என எண்ணி,
ஆள்பவன் மனத்தில் ஆனந்த வெள்ளம்,
அவன் ஆசை,
சங்கத்துள் ஓசையாய் ஒலித்தது.
வென்றார்க்கு இதுவென வேத்தவை வாசல் தன்னில்,
பொன்னினாற் பொழிந்த நல்ல பொற்கிழி ஒன்றமைத்து,
கவி பண்ணியே பெறுக என்று காவலர் தூங்க விட்டார்.

**ஐயுறு கருத்தை யாவராயினு(ம்) அறிந்து பாடல்**
**செய்யுந(ர்) அவர்க்கே இன்ன ஆயிரஞ் செம்பொ(ன்) என்றக்**
**கையுறை வேலா(ன்) ஈந்த பொற்கிழி கைக்கொண்(டு) ஏகி**
**மெய்யுணர் புலவர் முன்னர்த் தூக்கினார் வினைசெய் மாக்கள்.**

நக்கீரன் தலைமையில் நற் பெரும் புலவோர்,
மன்னன்தன் மனத்துறு ஐயம் யாதென,
தேடி ஆராய்ந்து தேம்பிச் சோர்ந்தனர்.
கூடி ஆராயின் குறைவுறும் பரிசு என்று,
தனித்தனித் தேடி ஆராய்ந்து தளர்ந்தனர்.
உற்றது உணரும் தன்மையிலா தம்சிற்றறிவால்,
மன்னவன் மனக்கருத்தறியாது மருண்டனர்.
அறியாததறிந்தும் அரும்பொருள் ஆசைகொண்டு
கருத்திலாக் கவிதை செய்து கவின்றனர்.

**வங்கத்தார் பொருள் போல் வேறு வகையமை கேள்வி நோக்கிச்**
**சங்கத்தாரெல்லாம் தம்மில் தனித்தனி தேர்ந்து தேர்ந்து**
**துங்கத்தார் வேம்பன் உள்ளம் சூழ்பொருள் துழாவி உற்ற**
**பங்கத்தாராகி எய்த்துப் படர் உறு மனத்தரானார்.**

அந்த வேளையில் ஆதி சைவருள்,
தந்தைதாயிலாத் தருமி என்பவன்,
மாணவப்பருவம் நீக்கி மணம்புரி ஆசை தோன்ற,
மதுரைச் சொக்கநாதர்தம் திருவடி ஒன்றே கதியென நினைந்து,
வேண்ட முழுதும் தருகின்ற அவ்வேயிறுதோளிபங்கன் முன் சென்று,
தன் வருத்தமுரைத்து வாடினான்.
கல்வியின் முடிந்த பயன் அக்கடவிளே என்னும்,
உண்மை ஞானம் உதித்த அப்பார்ப்பனன்,
அறிவு தரும் ஆணவம் சிறிதும் இல்லாச் சிந்தையொடு,
"இல்லறம் புகுந்தாலன்றி இறைவாக்குச் சேவை செய்யும்,
நல்லறம் வாய்க்காது ஐயா நான் என்ன செய்வேன்" என்றும்,
"பொன்னிலாக் கையனாய் நான் எவர் மனை புகுந்து,
எற்குப் பெண் கொடு என்று கேட்பேன் பேதையேற்கு உறவுமில்லை.
என் பொருட்டு ஏதும் செய்ய வேண்டும்" என்றும் இறைஞ்சி நின்றான்.

"மன்னவன் மனக்கருத்தை விளக்கி,
இறைவ ஓர் கவிதை தந்தால் ஏழையேன் உய்வேன்" என்று,
தன்னறிவுந்தத் தானே வழியொன்றும் கூறி,
நெற்றிக்கண்ணுளார் திருமுன் சென்று கலங்கியே நின்றான்.

**தந்தை தாயிலேன் தனிய னாகிய**
**மைந்த னேன்புது வதுவை வேட்கையேன்**
**சிந்தை நோய்செய்யும் செல்ல(ல்) தீர்ப்பதற்**
**கெந்தை யேயிது பதமென் றேத்தியே**

**ஐய யாவையு அறிதி யேகொலாம்**
**வையை நாடவன் மனக்கருத் துணர்ந் (து)**
**உய்ய வோர்கவி உரைத்தெ னக்கருள்**
**செய்ய வேண்டுமென் றிரந்து செப்பினான்**

வேண்டுவார்க்கு வேண்டுவன ஈயும் வேந்தன்,
வேதியனின் வேதனையை விலக்க உளம் கொண்டான்.
ஓதி உணர் அறிஞரெலாம் உணரமாட்டா,
ஒப்பற்ற கவி ஒன்று உரைத்துத்தந்தான்.
வறுமையால் மனம் வாடி நின்றதோர்,
ஏழைபெற்ற நல் இனிய செல்வமாய்,
கடவுள் தந்த அக்கவியை வாங்கி,
தன்தலையிற் சூடி அத்தருமி விம்மினான்.
இறையனார் தந்த அந்த இனிய நற்கவிதை இன்றும்,
சங்கப்பாடலுள் தங்கமாய் மின்னும்.

குற்றச்சாட்டுத் தொடரும்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவோம்

## திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்
## திருவாய் மலர்ந்தருளிய
## கோளறு பதிகம்

**பதிக வரலாறு**

மதுரையிலிருந்து அரசாண்ட கூன்பாண்டியன், முன் செய்த தீவினையினால் சமண சமயத்தைத் தழுவினான்; குடிமக்களும் சமணராயினர். அரசனின் மனைவி மங்கையர்கரசியாரும் மந்திரி குலச்சிறையாரும் மட்டுமே சைவர்களாயிருந்தனர். திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் அவ்வமயம் வேதாரணியத்தில் இருந்தத னால், மதுரை மக்களின் நிலைபற்றி அவரிடம் சொல்லுமாறு, அரசியும் மந்திரியாரும் சில பரிசனங்களை அனுப்பினார்கள். உண்மை நிலையை அறிந்துகொண்ட திருஞானசம்பந்தர் மதுரைக்குப் போகப் புறப்பட்டார். கூட இருந்த அப்பர், சமணர்கள் பொல்லாதவர்கள் என்றும், சிறுபிள்ளையாகிய திருஞானசம்பந்தர் அங்கே செல்லக்கூடாதென்றும் தடுத்தார்; ஞானசம்பந்தரின் கிரக நிலை சரியில்லை என்பதையும் அவர் சுட்டிக்காட்டினார். கிரகங்கள் எல்லாம் சிவபெருமானுடைய ஆணைப்படியே செயற்படுபவை. சிவபெருமான் என்னுள்ளத்தில் இருப்பதனால், எனக்கு எந்தத் தீமையும் வராது" எனச் சொல்லி, கோளாறு பதிகத்தை ஓதி, அப்பரடிகளின் இசைவைப் பெற்றுக்கொண்டு மதுரைக்குப் புறப்பட்டார், திருஞானசம்பந்தர்.

நவக்கிரகங்களுள் சனைச்சரன் என்ற சனி பகவான் மிகவும் பொல்லாதவர் என்ற எண்ணம் பலரிடமுண்டு. நோய், நொடி, பல்வேறு தொல்லைகள் போன்றவற்றை அவர் கொடுப்பார் என்று பலர் பயப்படுகின்றார்கள். ஆனால், உத்தியோகம், திருமணம், சௌபாக்கிய வாழ்வு போன்றவற்றைக் கொடுப்பவரும் அவரே. புரட்டாதிச் சனிக்கிழமைகளில் சனீஸ்வரனை விசேடமாக வழிபட்டு, கோளறு பதிகத்தைப் பலர் ஓதுவர். அனைவருக்கும் பயன்படும் வகையில், பதிகப் பாடல்களையும் கருத்தையும் இந்த இதழிலிருந்து தொடர்ந்து வெளியிடுகின்றோம்.

**பண்: பியந்தைக் காந்தாரம்**

வேயுறு தோளி பங்கன் விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணை தடவி
மாசறு திங்கள் கங்கை முடிமே லணிந்தெ
னுளமே புகுந்த வதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழம் வெள்ளி
சனிபாம் பிரண்டு முடனே
ஆசறு நல்ல நல்ல வவைநல்ல நல்ல
வடியா ரவர்க்கு மிகவே

**பதவுரை:** **வேய் உறு தோளி பங்கன்** – மூங்கில் போன்ற தோள்களையுடைய உமாதேவி பாகரும், **விடம் உண்ட கண்டன்** – நஞ்சையணிந்த கண்டத்தை உடையவரும், **மிக நல்ல வீணை தடவி** – மிகவும் நன்மையையுடைய வீணையை வாசிப்பவருமாகிய சிவபெருமான், **மாசறு திங்கள் கங்கை முடிமேல் அணிந்து** – குற்றமற்ற சந்திரனையும் கங்கையையுந் திருமுடியின் மீது தரித்து, **என் உளமே புகுந்த அதனால்** – அடியேனது மனத்தில் எழுந்தருளியமையினால், **ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழம் வெள்ளி சனி** – சூரியனும், சந்திரனும் செவ்வாயும் புதனும், வியாழனும் வெள்ளியும், **சனியும், பாம்பு இரண்டும் உடனே** – இராகுவும் கேதுவுமாகிய பாம்புகளுடனே, **அடியார் அவர்க்கு** – சிவனடியார்களுக்கு, **மிகவே**– மிகுதியாகவே, **ஆசறு நல்ல** – குற்றமற்றவையாய் நல்லவையாக, **அவை நல்ல நல்ல**– அவைகள் நல்லவையாக இருக்கின்றன.

**பொழிப்புரை:** உமாதேவியாரை ஒரு பாகத்தில் வைத்திருப்பவரும் நஞ்சையுடைய கண்டத்தைக் கொண்டவரும், வீணையை வாசிப்பவரும், சந்திரனையும் கங்கையையும் சடையில் தரித்தவரு மாகிய சிவபெருமான் என் உள்ளத்தில் இருக்கின்றபடியால், ஞாயிறு, திங்கள், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி, இராகு, கேது ஆகிய கிரகங்கள், சிவனடியாரான எனக்கு என்றும் நல்லவற்றையே செய்யும்.

என்பொடு கொம்பொ டாமை யிவைமார் பிலங்க
எருதேறி யேழை யுடனே
பொன்பொதி மத்த மாலை புனல்சூடி வந்தெ
னுளமே புகுந்த வதனால்
ஒன்பதொ டொன்றொ டேழு பதினெட்டொ டாறு
முடனாய நாள்க ளவைதாம்
அன்பொடும் நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

**பதவுரை:** **என்பொடு கொம்பொடு ஆமை இவைமார்பு இலங்க** – (பிரமவிட்டுணுக்களுடைய) எலும்பும், (பன்றிக்) கோடும், ஆமையின் முதுகோடும் ஆகிய இவைகள் மார்பிலே பிரகாசிக்க, **பொன்பொதி மத்த மாலை** – பொலிவு பொருந்திய மதமத்தம் பூமாலையையும், **புனல் சூடி** – கங்கையையுந் திருமுடியில் அணிந்து **ஏழையுடனே** – உமாதேவியாரோடும், **எருது ஏறி வந்து** – இட வாகனத்தின் மேல் வந்து, **என் உளம் புகுந்து அதனால்** – அடியேனது மனதில் புகுந்த காரணத்தினால், **ஒன்பது** – ஒன்பதாவது நாளாகிய ஆயிலியமும், **ஒன்பதோடு ஒன்று** – பத்தாவது நாளாகிய மகமும், **ஒன்பதோடு ஏழு** – பதினாறாம் நாளாகிய விசாகமும், **பதினெட்டு** – பதினெட்டாவது நாளாகிய கேட்டையும், **ஆறும்** – ஆறாவது நாளாகிய திருவாதிரையும், **உடன் ஆய நாள்கள் அவைதாம்** – இவைகளோடு சேர்த்து எண்ணப்படும் பரணி, கார்த்திகை, பூரம், சித்திரை, சுவாதி, பூராடம், பூரட்டாதி, என்னும் நாள்கள் ஆகிய அவையாவும், **அடியார் அவர்க்கு**– சிவனடியார்களுக்கு, **மிக அன்பொடு** – மிகவும் அன்புடன், **நல்ல நல்ல அவை நல்ல நல்ல** – எல்லாமே நல்லனவாகும்.

**பொழிப்புரை:** எலும்பு, பன்றிக்கோடு, ஆமை ஓடு ஆகியவை மார்பிலே பிரகாசிக்க, மதமத்தம் பூமாலையையும் கங்கையையுந் திருமுடியிலே அணிந்து, உமாதேவியாருடன் எருதின்மேல் ஏறி என் உள்ளத்துள் சிவபெருமான் புகுந்திருப்பதனால், ஆயிலியம், மகம், விசாகம், கேட்டை, திருவாதிரை, பரணி, கார்த்திகை, பூரம், சித்திரை, சுவாதி, பூராடம், பூரட்டாதி ஆகிய பிரயாணத்துக்கு விலக்கப்பட்ட நாள்கள் எல்லாம் சிவனடியார்களுக்கு நல்ல நாள்களாகவே அமையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாவும் நல்வாழ்க்கையும்

சிவத்தமிழ் வித்தகப் சிவ. மகாலிங்கம்

மனிதனுடைய உடலில் உள்ள உறுப்புக்களில் மிகவும் அவதானமாகப் பேண வேண்டிய உறுப்புக்கள் சில உண்டு. இதயம், நுரையீரல், சிறுநீரகம், கண், இரைப்பை, நாவு என்பன அவற்றில் முக்கிய இடம் பெறுகின்றன. இதயம் சீராக இயங்கினால் தான் உடம்பில் இரத்த ஓட்டம் சரியாக இருக்கும். நுரையீரல் ஒழுங்காக வேலை செய்யாவிட்டால் சுவாசிப்பது சிரமமாகி விடும். சிறுநீரகம் சரியாகச் செயற்படாவிட்டால் உடலில் உள்ள கழிவு நீர் வெளியேறுவதில் தடை ஏற்படும். கண் பார்வையை இழந்தால் காட்சியால் பெறும் அறிவு முற்றாகத் தடைப்பட்டு விடும். ஆரோக்கியமற்ற உணவுகளை உள்ளே செலுத்தினால் இரைப்பை உடலிற் பல சங்கடங்களைக் கொடுக்கும். "எண் சாண் உடம்பிற்குச் சிரசே பிரதானம்" என்பது பழமொழி. தலையின் உள்ளே இருக்கும் மூளையில் பழுது ஏற்பட்டால் மனிதனின் நடத்தைக் கோலங்களே மாறிவிடும்.

மேற்கூறிய உறுப்புக்களால் ஏற்படும் பாதிப்பு தனி மனிதனைச் சார்ந்ததாகவே இருக்கும். ஆனால் உடல் உறுப்புக்களில் ஒன்றாகிய நாக்கினால் ஏற்படும் பாதிப்பு பல விபரீதங்களைத் தோற்றுவிக்கும். பல்வேறு தாக்கங்களை ஏற்படுத்தும். குடும்பம், அயல், உறவுகள், நண்பர்கள் ஆகியோரிடம் ஏற்படும் பல்வேறு பிரச்சினைகளுக்கும் முக்கிய காரணமாக இருக்கும் உறுப்பு நாக்கே ஆகும். இதனால் தான் தெய்வப் புலவர் திருவள்ளுவரும் மனிதன் வேறு எவற்றைக் காக்காவிட்டாலும் நாவைக் காக்க வேண்டும் என்கிறார். காக்கத் தவறினால் சொற் குற்றத்துக்கு ஆளாகித் துன்பப்பட வேண்டும் என்கிறார்.

> நாம் நமது நாவை மிகவும் அவதானமாக உபயோகிக்க வேண்டும். நமது ஊடகங்கள், தொலைக்காட்சிகள் பலவற்றுக்கு வழமையாகிவிட்டது போல நாம் உபயோகிக்கும் சொற்களும் அமைந்து விடுவதைப் பலர் உணர்வதில்லை. இன்சொல் பேசுவதை - இறைவன் புகழ் பாடுவதை நாவின் இயல்பாக ஆக்கிக்கொள்ள வேண்டும் என்பதை வலியுறுத்துகின்றார் சிவத்தமிழ் வித்தகர்.

யாகாவா ராயினும் நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல் இழுக்குப்பட்டு — திருக்குறள் – 127

ஒவ்வொரு மனிதனும் செய்யக்கூடிய அடிப்படை அறங்கள் எவை என்பதைத் தவயோகி திருமூலநாயனார் தான் அருளிய தமிழ் மந்திரமாகிய திருமந்திரத்திலே தெளிவாகக் கூறியுள்ளார். தினந்தோறும் வழிபாடு செய்யும் போது ஒரு பச்சிலையை எடுத்து அர்ச்சனை செய்வது; "கோமாதா எங்கள் குலமாதா" என்று போற்றுகின்ற பசுவிற்கு ஒரு பிடி உணவு கொடுப்பது; உண்ணும் உணவில் ஒரு கைப்பிடியைத் தானமாக வழங்குவது; பிறரிடம் கடுஞ்சொல் பேசாமல் இனிய வார்த்தைகளைப் பேசுவது ஆகியன சிறந்த அறங்கள் எனத் திருமந்திரம் கூறுகிறது.

யாவர்க்குமாம் இறைவற்கொரு பச்சிலை
யாவர்க்குமாம் பசுவுக்கொரு வாயுறை
யாவர்க்குமாம் உண்ணும்போதொரு கைப்பிடி
யாவர்க்குமாம் பிறர்க்கின்னுரை தானே.

நாளாந்த வாழ்க்கையைத் திட்டமிட்டு வாழ்பவர்கள் தாம் உழைக்கின்ற பணத்தை மிகச் சிக்கனமாகச் செலவு செய்வார்கள். "காலம் நம் கையில் கட்டுண்டு கிடவாது" என்பதை உணர்ந்த அவர்கள் நேரத்தையும் சரியாகப் பயன்படுத்துவார்கள். ஆனால் தமது உடல் உறுப்புக்களில் ஒன்றாகிய நாவைச் சரியாகப் பயன்படுத்தாமல் தவறாகப் பயன்படுத்திப் பல துன்பங்களை விலைக்கு வாங்குகிறார்கள்.

மற்றவர்களுடன் உரையாடுகின்றபொழுது இனிய வார்த்தைகளைப் பேசினால் அவர்களின் இதயம் குளிரும். வன்சொல்லைப் பேசினால் மனம் வாடி வதங்கிவிடும். இனிய வார்த்தைகள் கொதித்துக் குமுறுகின்ற உள்ளங்களைக் குளிர்விக்கும். பிறரை வருத்தாத இனிய சொல் மறுமையிலும் இம்மையிலும் இன்பத்தைத் தரும்.

சிறுமையுள் நீங்கிய இன்சொல்
மறுமையும்
இம்மையும் இன்பந் தரும்
(திருக்குறள்–98)

சிலருடைய சிந்தனைக்கும் வார்த்தைக்கும் இடையே தொடர்பு எதுவும் இருப்பதில்லை. கறந்த பால் முலைக்கு ஏறாது போல நாவால் பேசிய வார்த்தைகளை மீளப் பெற முடியாது. விருந்தினரை உபசரிக்கும்பொழுது முகம் மலர்ந்து அன்பாக உபசரிக்க வேண்டும். அன்பில்லாமல் கொடுக்கும் உணவு நஞ்சாக மாறிவிடும். வார்த்தைகளால் வதை கொண்டு ஒருவருக்கு உணவு அளிப்பதிலும் பார்க்க உணவு கொடுக்காமல் விடுவதே நல்லது என்பதை "ஏசிஇட்டலின் இடாமையே நன்று" என ஔவையார் குறிப்பிடுகின்றார்.

நமது சமயப் பண்பாட்டில் மனையறத்தில் வேராக விளங்குபவர்கள் மாதரசிகள். பெரியபுராண அடியார்களில் பெண் அடியார்களாகக் காணப்படும் காரைக்காலம்மையார், மங்கையர்க்கரசியார், இசைஞானியார் ஆகிய மூவரும் மனையறம் பேணிய மங்கையர்களாகத் திகழ்ந்தார்கள். கணவனிற்கேற்ற பதிவிரதைகளாக வாழ்ந்தார்கள். இந்து தர்மம் காட்டும் இல்லற தர்மத்திற்கு உதாரணம் காட்டக்கூடிய மங்கையர்களாகத் திகழ்ந்தார்கள்.

மனையறத்தின் ஆணிவேராக இருக்கும் பெண்களாக நாவடக்கம் இல்லாதவர்களாக இருப்பவர்களுடன் வாழ்வதிலும் பார்க்கப் பேயோடு கூடி வாழலாம் என்பதை

"எதிர்பேசும் மனையாளில் பேய் நன்று"

எனத் தமிழ் மூதாட்டியின் பாடல் குறிப்பிடுகிறது.

மற்றவர்களுடன் இனிய வார்த்தைகளைப் பேசுவதற்கும் "யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்ற வாக்கிற்கு அமைய நாம் அறிந்து உணர்ந்த ஆன்மீக ஞானத்தை மற்றவர்களுக்கு ஞான பாடமாகக் கூறுவதற்கும் நமது நாவை உபயோகிக்கலாமல்லவா?

சிவனருளில் சிவமணம் பூத்த ஞானச் செல்வர்களாகிய அருளாளர்கள் தந்த தோத்திரப் பாடல்களை நாளும் நமது நாவினால் உணர்ந்து ஓத வேண்டும். "நாவே வாழ்த்து கண்டாய்" என்ற அப்பர் பெருமானின் வாக்கிற்கு அமைய "பாடும் பணியே பணியாய் அருள்வாய்" என்ற அருணகிரிநாதரின் மந்திர மொழிக்கு ஏற்ப நாம் அனைவரும் நமது நாவினால் இறைவன் புகழ் பாடுவோமாக.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# VOICE OF GOD

*Prof. A. Sanmugadas, Ph.D. (Edinburgh)*

We all would love to hear God's voice. Unfortunately we are not tuned to that state of seeing or listening to Him. Japanese have a set of poems that are called "God's voices". These particular poems have hidden meanings which are taken as prophecies or voices of God. In Bible, we read that people have listened to Lord Abraham's voice. Tamil literary texts document some instances where God's voice is heard.

First time we hear His voice in Thirumuru karruppatai (284-291). Nakkirar, the poet announces:

'அளியன் றானே முதுவாய் இரவலன்
வந்தோன் பெரும!நின் வண்புகழ் நயந்து'

"Oh Lord! The beggar who has wise mouth and who is to be pitied, has come, admiring your glory,"

Nakkirar continues to say that at that time Lord Murukan has appeared on the top of the hill showing His young divine form and said to the beggar,

"அஞ்சல் ஓம்புமதி அறிவல்நின் வரவு"
"Fear not, I am aware of your arrival"

Thus spake Lord Murukan! This is the first Tamil literary evidence of God's voice.

We have clear evidence in Cilappatikaram where the God's voice is heard as a reply to Kannaki. Kannaki heard that her husband has been slaughtered by the order of the King. She very well knew that her husband was innocent and faultless. Therefore she wanted to verify with the Divine. She calls all the women of the cowherds. In front of them she asks the Sun God:

'பாய்திரை வேலிப் படுபொருள் நீயறிதி
காய்கதிர்ச் செல்வனே கள்வனோ என்கணவன்'

"Oh God of burning rays! You are aware of all what is happening in the world that is surrounded by water. Is my husband a thief?"

As an answer to it the voice of the God is heard:

'கள்வனோ அல்லன் கருங்கயற்கண் மாதராய்
ஒள்ளெரி உண்ணுமிவ் வூரென்ற தொருகுரல்'

"Oh Lady with black Kayal fish-like eyes! He is not a thief! This city will be consumed by fire. Said a voice."

The Saiva Tamil epic Periyapuranam has several instances where the voice of the God is heard. It starts with Sundarar where God comes as an old Brahmin to file a case against him. Finally the Brahmin won the case and Sundarar followed Him to Thiruvennainallur temple where he hears the God's voice. Sundarar and others have already heard the voice of the God who was in the form of a Brahmin. They were not aware that they were hearing God's voice. But at the temple they were all aware that they were listening to the voice of God.

In the folk religion of the Tamils, we have seen persons dancing vigorously at temple rituals. People believed that God possessed them and whatever they said were believed to be the words of God. People thought that God was speaking to them through the persons who were possessed.

*Edited & Published by Mr.S.Shivasaravanabavan on behalf of the Saiva Paripalana Sabai, No.450, K.K.S. Road, Jaffna & Printed at Harikanan Printers, No.424, K.K.S. Road, Jaffna. 17.08.2010 (1st Day of Avaniththingal). Phone: 021 222 7678*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org